S. Nadarajah
Publisher

விலை சதம் 5

வெளியூர்ப் பதிப்பு

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

சுதந்திரன்
THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும்
சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(நகரப் பதிப்பு)
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
3 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா „ 12-00
1 வருடச் சந்தா „ 24-00
மானேஜர்
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

Phone: 3411
நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து ௵ கார்த்திகை ௴ 17௳ செவ்வாய்க்கிழமை - Colombo December. 2, 1947 ஹிஜ்ரி 1367 முஹர்ரம் பிறை 18 | இதழ் 182

சர்வ தேச வர்த்தக சாசனம்

ஹாவனா மகாநாட்டில் திரு. பாபா பேச்சு

ஹாவனா, நவ 29

இன்று இங்கு நடைபெறும் உலக வர்த்தக மகா நாட்டில் இந்தியாவின் பிரதிநிதியான இந்திய சர்க்கார் வர்த்தக மந்திரி திரு இ. எச். பாபா பேசிய போது பின்வருமாறு தெரிவித்தார்:- உலக வர்த்தக அபிவிருத்தியானது யுத்தத்தால் சேதமடைந்த உற்பத்தி சாதனங்களை சீர்படுத்துவதால் தான் ஏற்படுமேயொழிய வர்த்தக நிபந்தனைகளைத் தளர்த்துவதால மட்டும் ஏற்படாது. உலக வர்த்தக சாசனத்தை பொதுவாக நான் ஆதரிக்கிறேன். ஆனால் சாசனத்தில் கைச்சாத்திட்ட நாடுகள், சாசனக் கொள்கையை அனுஷ்டிப்பதால் மட்டும் உலக வர்த்தகம் பெருகிவிடும் என்று கருத முடியாது. இப்பொழுது உலகிலுள்ள முக்கியமான பொருளாதாரப் பிரச்னை பொருள்களின் உற்பத்தியேயாகும். உற்பத்தியில் முன்னேற்றமில்லாத நாடுகளில் உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டால் ஒழிய உலக வர்த்தகத்தில் அபிவிருத்தியும் வேலையில்லாத் திண்டாட்ட நிவிர்த்தியும் ஏற்படப் போவதில்லை

சாசனத்தின் பொருளாதார சம்பந்தமான அம்சங்கள் பற்றியும் வேலையில்லா திண்டாட்ட நிவிர்த்திபற்றியுமுள்ள பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு அந்தந்த நாடுகள் தங்கள் நிலைமைக்குத் தக்கவே தேசியக் கொள்கையை அனுஷ்டிக்கவேண்டும். இது சம்பந்தமாக கைத்தொழில் அபிவிருத்தியடையாத நாடுகளும், அபிவிருத்தி மார்க்கத்தில சென்றுகொண்டிருக்கும் நாடுகளும் தங்கள் குறைகளைத் தெரிவித்தன. இக்குறைகள் புறக்கணிக்கப்பாடாது கவனிக்கப்படவேண்டும்.

(ராய்ட்டர்)

கல்வி சம்பந்தமான சினிமாப் படங்கள்

சிங்களத்தில் விமர்சனம் சேர்க்கப்படும்

கொழும்பு, நவ. 30

இப்பொழுது கல்வி இலாகாவினால் காட்டப்படும் கல்வி சம்பந்தமான பேசும் படங்களுக்கு சிங்களத்தில் விமர்சனம் எழுதப்பட்டு அது படத்துடன் இணைக்கப்பட ஏற்பாடுகள் நடந்துவருகின்றன.

தற்போது கல்வி இலாகாவின் கைவசம் உள்ள படங்களில் இளவரசி எலிஸபெத்தின் வாழ்க்கை வரலாற்றுப் படமும் ஒன்றாகும்

கெனியாவில் இந்திய கிழவியின் நூற்றாண்டு விழா

"சிப்பாய் கலக"த்தை பார்த்தவள்

பீகம் நைரோபி, நவ 29

பீகம்ஸையத் அஹ்மத் தமது நூற்றாண்டு விழாவை இன்று கொண்டாடினர். அவர் நல்ல தேக திடத்துடன் இருக்கிறார் அவர் ராவல் பிண்டியில் பிறந்தவர் ஒன்பது வருஷங்களுக்கு முன் இங்கே வந்தார். பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக 1857ல ராணுவத்தினர் செய்த கலக சம்பவங்களும் அந்த அம்மாளுக்கு நன்றாக நினைவிருக்கின்றன.

இந்தியா-பாகிஸ்தான் சமரசப் பேச்சுகள்

பாகிஸ்தானுக்கு அனுப்பப்படும் தந்தி, டெலிபோன் கட்டண உயர்வு

ஹைதராபாத்துக்குப் புதிய மந்திரி சபை

தென் காஷ்மீரில் எதிரிகள் அட்டூழியம்!

புதுடில்லி, நவ. 29

இந்தியா-பாகிஸ்தான் சமாதானத் திட்டம் சம்பந்தமாக இந்திய சர்க்கார் பிரதிநிதிகளுக்கும் பாகிஸ்தான் சர்க்கார்பிரதிநிதிகளுக்குமிடையே சமரசப் பேச்சுகள்திருப்திகரமானமுறையில் நடைபெற்றுவருகின்றன. நாளையும் நடைபெறும். நாளை நடைபெறும் பிரிவினை கவுன்ஸில் கூட்டத்தில் நிதி சம்பந்தமான சமரச ஒப்பந்தங்கள் ஏற்படும். கூட்டுப் பாதுகாப்பு சபையில் காஷ்மீர் சம்பந்தமாக சமரசப் பேச்சுகள் திருப்திகரமாக நடைபெறுகின்றன.

கூட்டுப் பாதுகாப்பு சபையின் அடுத்த கூட்டம் லாகூரில் டிசம்பர் 6-ந் தேதி ஆரம்பமாகும்.

இரட்டிப்புக் கட்டணம்

புதுடில்லி. நவ. 29

தற்காலிக ஒப்பந்தம் காலாவதியாவதால் டிசம்பர் முதல் தேதி முதல் இந்திய சர்க்கார் பாகிஸதானுக்கு அனுப்பப்படும் தந்தி, டெலிபோன் கட்டணங்களை இரட்டிப்பாக அதிகரித்திருக்கிறார்கள்.

சாதாரண தந்திக்கு முதல் 8 வார்த்தைகளுக்கு ஒரு ரூ 6 அணா; அதிகப்படியான ஒவ்வொரு வார்த்தைக்கும் 2 அணா. எக்ஸபிரஸ தந்திக்கு இந்தக் கட்டணத்தில் இருமடங்கு; பத்திரிகைச் செய்தி தந்திக்கு முதல் 40 வார்த்தைகளுக்கு ஒரு ரூபாய் 14 அணா ஒரு பைசா; அதிகப்படியான ஒவ்வொரு 5 வார்த்தைகளுக்கும் 2 அணா; எக்ஸபிரஸ பத்திரிகைத் தந்திக் கட்டணம் இதைவிட இரண்டு மடங்கு; டெலிபோன் பேசுவதற்கும் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. பாகிஸதானுக்கு டெலிபோன் பேச விரும்புவோர் டெலிபோன் ஆபிஸ அதிகாரியிடம் கேட்டு கட்டண விபரத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும்

ஹைதராபாத்தில் புதிய மந்திரி சபை

ஹைதராபாத், நவ 29

ஹைதராபாத் மந்திரி சபை கலைக்கப்பட்டது. புதிய இடைக்கால மந்திரி சபை நிறுவப்படும். அதில் 4 ஹிந்து மந்திரிகளும் 4 முஸலிம் மந்திரிகளும் சமஸதானம் நியமிக்கும் 4 மந்திரிகளுமிருப்பார்கள். இப்பொழுதுள்ள மந்திரி சபையிலிருக்கும் இரு மந்திரிகளுமிருப்பார்கள். மீர்செயில் அலி பிரதம மந்திரியாக ஒருவருட காலத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் இன்று பதவி ஏற்றுக்கொண்டார். இவர் புதிய இடைக்கால மந்திரி சபையை அமைப்பார். உதவிப் பிரதம மந்திரியாக இருந்த சர் மேதியார் ஜங்கும் சட்ட மந்திரியாக இருந்த ராஜா பகதூர் ஆராவமுத ஐயங்காரும் பதவிகளிலிருந்து விலகிக்கொண்டார்கள்.

காஷ்மீர் போர்

புதுடில்லி, நவ. 29

இந்திய பாதுகாப்பு இலாகா அறிக்கை தெரிவிப்பதாவது:-

சென்ற 24 மணி நேரத்தில் அதிக மாறுதல் இல்லை. பூஞ்ச் பிரதேசத்தில் இந்திய துருப்புகள் எதிரிகளுக்கு பெரும் சேதம் விளைவித்தன. மிர்பூர் பிரதேசத்தில் வந்து கூடிய எதிரிகளை இந்திய ராணுவ விமானங்கள் தாக்கி சேதம் விளைவித்து சிதறடித்தன. எதிரிகளின் பீரங்கிகள் நாசமாக்கப்பட்டன.

ராய்ட்டர் நிருபர் கூறும் விபரம்

ஜம்மு, நவ. 29

ராய்ட்டர் நிருபர் தெரிவிப்பதாவது:-

தென் காஷ்மீரில் சுமார் 6 ராணுவ ஸ்தலங்களை மீட்ட இநதய துருப்புகள் இன்றிரவு எதிரிகளின் அணிவகுப்பை எதிர்த்துப் போராட வேண்டியதாயிற்று. நிலைமை முன்னைவிட அபாயகரமாக இருக்கிறது. எதிரிகள் காஷ்மீர் மேற்கு பாகிஸ்தான் எல்லையில் 90 மைல் நீள போர் முனையில் பல ஆயிரக் கணக்காக அணிவகுத்து நின்று மலையுச்சிகளில் பீரங்கிகளை நிறுவிக்கொண்டு போராடுகிறார்கள்.

இதற்கு முன்பு எதிரிகள் மிர்பூர் பிரதேசத்தில் பல கிராமங்களைத் தரைமட்டமாக்கிவிட்டு வெளியேறினர். எதிரிகள் வடக்கே டலஸதரியிலிருந்து தெற்கே அக்னூர் வரை அணிவகுத்து டலங்தரிலுள்ள சுதந்திர காஷ்மீர் சர்க்காருடன் சம்பாதம் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள் இந்தியா-பாகிஸதான் எல்லைக்கருகே இப் போராட்டம் நடைபெறுகிறது.

பெண்கள் கொலை

காஷ்மீர், நவ 29

தென் காஷ்மீரில் எதிரிகள் இன்றிரவு மேற்குப் பஞ்சாப் எல்லையருகிலுள்ள கிராமங்களை நாசமாக்கி அங்குள்ள பெண்களையும் குழந்தைகளையும் ஆடுமாடுகளை வெட்டுவதுபோல வெட்டிக் கொன்று குவித்துவிட்டுப் பின்வாங்கினர்.

அமெரிக்காவிலிருந்து திரும்பும் பாகிஸதான் எஞ்சினியர்

லண்டன், நவ 29

பாகிஸ்தான் ஒலிபரப்பு நிலைய எஞ்சினியர் ரியாஸ் அகமது நியூயார்க்கில் 5 லட்சம் டாலர் பெறுமான ஒலிபரப்பு கருவிகளும் யந்திரங்களும் வாங்கிக்கொண்டு லண்டன் வந்து சேர்ந்தார். அவர் கராச்சிக்குச் செல்வார். அவர் வாங்கிய சாமான்கள் ஜனவரி மாதம் பாகிஸ்தானுக்கு அமெரிக்காவிலிருந்து ஏற்றுமதி செய்யபடும்.

நிவாரண நிதி

பாஞ்சால அகதிகள் கஷ்ட நிவாரணத்திற்கு பிரிட்டனிலுள்ள இந்திய தொழிலாளர்கள் 7 ஆயிரம் ரூபாய் அனுப்பியிருப்பதாக லண்டன் இந்திய தொழிலாளர் சங்கத் தலைவர் அக்பர்கான் தெரிவிக்கிறார் அவர் இதற்கு முன் 500 பவுண் சேகரித்து இந்திய சர்க்காருக்கு அனுப்பியுள்ளார். இன்னும் பணம சேர்ந்து வருகிறது.

லண்டனிலுள்ள சுயராஜ்ய மாளிகைக்கு இங்குள்ள பிரபல இந்தியர் குந்தலால் ஜாரி தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பிரிட்டனிலுள்ள சுவிட்ஜர்லந்து ஸ்தானிகர் அடுத்தமாதம் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் விஜயம் செய்வார்.

[ராய்ட்டர்]

தென்னாப்பிரிக்க தங்கச்சுரங்க முதலாளிகள்

திருட்டுக் குற்றச்சாட்டு

தலா 5000 பவுண் பிணையில் விடுதலை

ஜோகன்னஸ்பர்க், நவ. 29

நியூ யூனியன் தங்கச் சுரங்கக் கம்பெனியின் மாஜி மானேஜிங் டைரக்டர்களான நார்பர்ட் எர்லி, ஜோசப் மில்னே ஆகிய இருவர்மீது திருட்டுக் குற்றஞ்சாட்டி இன்று மாஜிஸ்திரேட் கோர்ட்டில் தொடரப்பட்டிருந்த வழக்கில் இன்று இருவரும் கோர்ட்டில் ஆஜரானார்கள். இருவரையும் மாஜிஸ்திரேட் 5000 பவுண் ஜாமீன் பேரில் விசாரணை முடியும்வரை விடுவித்தார்.

நார்பெர்ட் எர்லி என்பவர் 44 வயதுள்ளவர். லண்டனில் பிறந்தவர். காம்பிரிட்ஜ் பட்டதாரி. கானடா தங்கச்சுரங்க முதலாளியாக இருந்து ஏராளமான திரவியம் சம்பாதித்தவர் நியூ யூனியன் தங்கச் சுரங்க கம்பெனி மானேஜிங் டைரக்டர் பதவியிலிருந்து சென்ற அக்டோபர் மாதம் விலகினார்.

மூன்று வாரங்களுக்குப் பின் சுப்ரீம் கோர்ட் உத்தரவின் பேரில் ஆங்கிலோ-டிரான்ஸ்வால் கம்பெனியார் நியூ யூனியன் தங்கச் சுரங்கங்களின் நிர்வாகஸ்தர்களானார்கள். இக் கம்பெனி நியூ யூனியன் கம்பெனியின் 'எம்பயர்' என்ற தங்கச் சுரங்கத்தை 6 கோடி பவுனுக்கு விலைக்கு வாங்கியிருந்தனர். இந்தக் கம்பெனியையும் ஆரம்பித்து வளர்த்தவர் எர்லியே. நியூ யூனியன் கம்பெனியிலிருந்து அவர் விலகியதும் ஜோசப் மானேஜிங் டைரக்டரானார்.

புதுவை ஹிந்துவுக்கு சிறைத் தண்டனை

ஜப்பானியருக்கு உதவி புரிந்தாராம்

பாரிஸ, நவ. 29

இந்தோ சீனா ஆக்ரமிப்பு காலத்தின்போது ஜப்பானியர்களுடன் சேர்ந்துகொண்டதற்காக புதுச்சேரியைச் சேர்ந்த ஓர் ஹிந்துவான மார்சல் மன்னார் என்பவருக்கு இந்தோனேஷிய நீதிமன்றம் இன்று இருவருட சிறை தண்டனையும் 10 வருடங்களுக்கு சிவில் உரிமைகளை இழக்கவும் தண்டனை அளித்தது

ஜப்பானியர்களுக்கு பிரசாரம் செய்ததாகவும். மொழிபெயர்த்து கூறி வந்ததாகவும், இவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. தனது வாதத்தில் மன்னார் தான் ஓர் கலைப் பற்றுடையவன் என்று வற்புறுத்திக் கூறினார்.

பாலஸ்தீனத்தைப் பிரிக்க ஐக்கிய தேச சபை முடிவு

இந்தியா, பாகிஸ்தான், அராபிய நாடுகள் கண்டனம்

யூதர்கள் ஆனந்தம், பிரிட்டனின் மௌனம் அராபிய லீக்கின் போர்க்கோலம்

நியூயார்க், நவ. 30

பாலஸ்தீனப் பிரிவினைத் திட்டத்தை நேற்றிரவு ஐக்கிய தேச பொதுச் சபை அங்கீகரித்துவிட்டது. பிரிவினைக்கு சாதகமாக 33 வோட்டுகளும், பாதகமாக 13 வோட்டுகளும் கிடைத்தன. 10 நாட்கள் நடுநிலைமை வகித்தன. ஒரு நாட்டின் பிரதிநிதி கூட்டத்திற்கு வராமலே இருந்துவிட்டார்.

பாலஸ்தீனத்தை யூதர் நாடாகவும் அராபிய நாடாகவும் இருபகுதிகளாகப் பிரித்து ஜெருசலேமை சுதந்திர நகராக்க 'வேண்டுமென்றுள்ள பிரிவினைத் திட்டம் ஐக்கியதேசப் பொதுச் சபையில் நிறைவேற்றப்பட்டபோது சிரியா பிரதிநிதி அல்கூரி பின்வருமாறு எச்சரித்தார்:- 'உலகெங்குமுள்ள அராபியர்களும் முஸ்லிம்களும் இப்பிரிவினைத் திட்டம் அமுல் செய்யப்பட முடியாதபடி தடுப்பதற்காக எதிர்ப்பார்கள். 10 கோடி மக்களுள்ள அகில ஆசியாவும் இதை எதிர்க்கும்.

அராபிய மேல் கமிட்டியின் பிரதிநிதி ஜமால் ஹுசைனி பின்வருமாறு தெரிவித்தார்:- இது கடுதாசியில் எழுதப்படும் தீர்மானமேயாகும். பாலஸ்தீனத்தில் தானே அதை அமுல் நடத்த வேண்டும் என்ன நடக்கிறது என்று நீங்கள் 'காத்திருந்தால் தெரிந்து கொள்வீர்கள்.

பிரிவினைத்திட்டம் நிறைவேற்றப்பட்டபோது, இந்தியா, பாகிஸதான், மற்றும் அராபிய நாடுகள் இவைகளின் பிரதிநிதிகள், இத்தீர்மானம் தங்களைக் கட்டுப்படுத்தாதென்றும், இது சம்பந்தமாக தாங்கள் ஐக்கியமாக தங்களிஷ்டப்படி நடவடிக்கை எடுக்க தங்களுக்கு உரிமையுண்டு என்றும் தெரிவித்துவிட்டு வெளியேறினார்கள்.

25 வருடகாலமாக பாலஸதீனத்தில் பாதுகாப்பு நிர்வாகம் நடத்திவந்த பிரிட்டன் பாலஸதீனத்தைவிட்டு வெளியேறும் போது, யூத, அராபிய பாலஸ்தீன நாடுகளின் நிர்வாகத்தை ஏற்க ஐக்கியதேச ஸ்தாபனம் நியமித்துள்ள கமிஷனில் செக்கோஸலவகியா, டென்மார்க், பனாமா, பிலிப்பைன் ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

பிரச்னை தீர்மானம் நிறைவேறும்போது, அங்கிருந்த சுமார் 12 யூதர்கள் வெட்கமின்றி ஆனந்தக் கூச்சலிட்டு கை தட்டினார்கள்.

பிரிவினைக்கு சாதகமாக வோட்டு அளித்தநாடுகள் பின்வருமாறு:-

ஆஸதிரேலியா, பெல்ஜியம் பொலிவியா, பிரேஸில், பைலோ ரஷியா, கானடா, கோஸடாரிகா, கௌதமாலா, ஹெயிட்டி, ஐஸ்லந்து, லிபெரியா, லக்சம்பர்க், ஹாலந்து, செக்கோஸலவகியா, டென்மார்க், டொமினிகா, ஈக்வேடார், பிரான்ஸ, நியூஜிலந்து, நிக்கருகா, நார்வே, பனாமா, பராகுவே, பெரு, பிலிப்பைன்ஸ, போலந்து, சுவீடன், உக்ரைன், தென்னாப்பிரிக்கா, உருகுவே, சோவியத் ரஷியா, அமெரிக்கா, வெனிசுலா,

பிரிவினைத் தீர்மானத்திற்கு விரோதமாக வாக்களித்தநாடுகள் பின்வருமாறு:- இந்தியா, பாகிஸதான், ஆப்கானிஸதான் பாரசீகம், ஈராக், சாவூதி அரேபியா, யேமன், லெபானன், சிரியா, துருக்கி, கிரீஸ, எகிப்து, கியூபா,

நடுநிலைமை வகித்த நாடுகள் பின்வருமாறு:-

ஆர்ஜன்டைனா, சில்லி, சைனா, கொலம்பியா, சால்வடர், எத்தியோபியா, ஹாண்டுராய், மெக்ஸிகோ, பிரிட்டன், யூகோஸலேவியா.

சயாம் பிரதிநிதி கூட்டத்திற்கு வரவே இல்லை.

காலரிகளில் இருந்தவர்கள் கூச்சலிடுவதை நிறுத்தும்படி தலைவர் எச்சரித்தார். பிறகு சாவூதி அரேபியா பிரதிநிதி பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:- ஐக்கிய தேச ஸ்தாபனம் நீதியாக நடக்குமென்று எண்ணியிருந்தோம் இன்றைய தீர்மானம் எங்கள் நம்பிக்கையைச் சிதறடித்துவிட்டது. பெரிய வல்லரசுகள் ஏனைய நாடுகளை தங்கள் நோக்கத்திற்குட்படுத்த பலவந்தம் செய்தது எங்களுக்குத் தெரியும்.

ஈராக் பிரதிநிதி பின்வருமாறு தெரிவித்தார்.-

இத்தீர்மானம் சமாதானம், நீதி, ஜனநாயகம் ஆகிய கொள்கைகளுக்கு விரோதமாகவும் ஐக்கியதேச ஸதாபன சாசனத்திற்கு விரோதமாகவும் செய்யப்பட்டுள்ளது.

யேமன் பிரதிநிதி பின்வருமாறு தெரிவித்தார்;- இத் தீர்மானம் எங்கள் நாட்டைக் கட்டுப்படுத்தப்போவதில்லை.

சிரியா பிரதிநிதி பின்வருமாறு தெரிவித்தார்:- ஐக்கிய தேச சாசனம் கொலைசெய்யப்பட்டுவிட்டது அதற்கு யார் குற்றவாளிகள் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும்.

இவ்விதம் தங்கள் கண்டனங்களைத் தெரிவித்துவிட்டு அராபிய நாடுகளின் பிரதிநிதிகளும் இந்தியா-பாகிஸ்தான பிரதிநிதிகளும் வெளியேறிவிட்டனர்.

அதன் பிறகு அமெரிக்காவிலுள்ள யூத ஸதாபனத் தலைவர் டாக்டர் சில்வர் பின்வருமாறு கூறினார்:- யூதச் சரித்திரத்தில் ஐக்கியதேச ஸதாபனத்தின் இத் தீர்ப்பு ஓர் முக்கியமான கட்டமாகும். பாலஸதீனத்தில் அமைதி நிலவும்படி நாம் பிரார்த்திப்போமாக! பாலஸதீனத்தில் ஏற்படும் புதிய அராபிய நாட்டுடன் நாங்கள் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம். பொருளாதார ஐக்கியத்தில் பாலஸ்தீனம் சுபீட்சமுறுவதற்கு பாலஸ்தீன யூதர் அரசாங்கம் பாலஸ்தீன அராபிய அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும்.

இத்தீர்மானத்தை பிரிட்டன் ஏற்றுக் கொள்ளும். ஆகஸட்

(4-ம் பக்கம் பார்க்க)

பரீட்சையில் ஆள் மாருட்டம்

எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்

கொழும்பு, நவ. 30

கடந்த ஆங்கில எஸ். எஸ். ஸி. பரீட்சையின்போது ஒரு மாணவர் இன்னொர் மாணவர் போல் நடித்து அவனுக்குப் பதிலாக வினாப் பத்திரங்களுக்கு விடை இறுத்தார். இவ் வாள் மாருட்ட சம்பவம் நேற்றுக் கொழும்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணைக்கு வந்தபோது சம்பந்தப்பட்ட மாணவர்கள் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

இவர்களில் ஒருவர் அம்பலாங்கொடை போஸ்ட் மாஸ்டரின் மகன் என்றும் மற்றவர் காலி டிஸ்ட்ரிக்ட் கோர்ட் காரியதரிசியின் குமாரரென்றும் கூறப்பட்டது.

இவ் ஆள் மாருட்டத்திற்கு முன்பே பரீட்சை மேற்பார்வையாளருக்கு இப்படி நடக்கப்போகிறது என்று தபால் மூலம் யாரோ தகவல் அனுப்பியிருந்தனர். இதனை உதவியாகக் கொண்டே சி ஐ டி. போலிஸ் மாணவர் இருவரையும் அகப்படுத்தினர்.

இவ்வழக்கு சம்பந்தமாக மாஜிஸ்டிரேட் உதவி கல்வி டைரக்டரை டிசம்பர் 8-ம் தேதி கோர்ட்டில் ஆஜராகும்படி உத்தரவு பிறப்பித்துள்ளார். அவரது சாட்சியத்தின் பினபே தீர்ப்பளிக்கப்படும்.

அடுத்த முனிசிப்பல் சபைக் கூட்டத்தில்

கொழும்பு. நவ. 30

"கடந்த பாராளுமன்றத் திறப்பு விழாவின்போது தங்கள் தகமைக்கேற்ற இடத்தில் பிரதிநிதிகள் சபைத்தலைவர் ஆசன வசதி கொடுக்காததால் முனிசிப்பல் சபை அங்கத்தினர்கள் இனிமேல் அவரால் அனுப்பப்படும் அழைப்புகளை ஏற்றுக்கொள்ளக் கூடாது" என்ற கருத்தடங்கிய தீர்மானம் ஒன்று அடுத்த முனிசிப்பல் சபைக்கூட்டத்தில் பிரேரிக்கப்படும் எனத்தெரிகிறது இததீர்மானத்தை எம். எச். முகம்மது கொண்டுவருவார்

எம். ஜி. மெண்டிஸ் வனாத முல்லை வீடமைக்கும் திட்டத்தில் வெள்ளத்தால் தாக்கப்படும் பெலங்கொள்ளுடுவ வாசிகளை முதலில் கவனிக்க வேண்டும் என்றும் இப்பகுதியில் வீதிகளில் மினசாரவெளிச்ச வசதி ஏற்படுத்தவேண்டும் என்றும் கோருவார்.

1948 முடியுமுன் 10,000 வீடுகளாவது கொழும்பில் கட்டியாக வேண்டும் என்று டொரிக் ஞுசா, அரசாங்கத்தை வேண்டிக் கொள்வார் எனத் தெரிகிறது,

கட்டுப்பாடுகளைத் தகர்க்க முதலாளிகள் முயற்சி

கொழும்பு. நவ. 30

இறக்குமதி வர்த்தகர் பலர் ஒன்று சேர்ந்து யுத்தம் முடிந்து வருடம் ஒன்றாகியும் கட்டுப்பாடுகள் நீக்கப்படாததை யிட்டு கிளர்ச்சி செய்யத் திட்டமிட்டிருப்பதாக அறியப்படுகிறது.

கட்டுப்பாடுகளை நீடிப்பதால் வர்த்தகம் மந்தமடைவதோடு, கள்ள மார்க்கட்டும் வளர்ச்சியடையும் என அவர்கள் வாதிக்கின்றனர்.

விளம்பரம்

வெள்ளவத்தை - பம்பலப்பிட்டி பகுதிகளில் ஒவ்வொரு வீடுகளுக்கும் 'சுதந்திரன்' பத்திரிகை ஆள் மூலம் தினசரி கொடுப்பதற்கு ஒழுங்குகள் செய்திருக்கிறபடியால் தேவையானோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு மனுச்செய்யவும்.

சந்தா பின்வருமாறு:-

1	மாதம்	ரூ. 2-00
3	மாதம்	ரூ. 6-00
6	மாதம்	ரூ. 12-00
12	மாதம்	ரூ. 24-00

மானேஜர்.
'சுதந்திரன்',
194 A, தட்டாரத் தெரு,
கொழும்பு.

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
194 ஏ, தட்டார்த் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வஜித்து வருஷம் கார்த்திகை மீ 17உ
செவ்வாய்க்கிழமை

நவீன துட்டகமுனு

துட்டகமுனு ஒரு சிங்கள அரசன். அவன் குழந்தைப் பருவத்திலேயே தமிழரை இலங்கையை விட்டு ஓட்டுவதற்குக் கங்கணம் கட்டினான். அவனுக்குச் சேனாபதி நீலன் என்னும் பெயருடைய ஒரு தமிழன். இவனுடைய உதவியைக் கொண்டுதான் எல்லாளனை போரில் புறங்கண்டான் துட்டகமுனு.

சரித்திரத்தில் முன் நடந்த சம்பவங்கள் போன்று மீண்டும் சில காலங்களில் ஏற்படுவதுண்டு. அப்படி ஏற்படாது போனாலும் சிலர் பழையவர்கள் போன்று நடக்க முற்படுவதுமுண்டு. அல்லது வேறு சிலர் புதியவர்களை சரித்திர பிரசித்தி பெற்றவர்கள் போன்று உண்டாக்க முயல்வதும் உண்டு. இந்த மூன்று பிரிவில் ஒன்றில் அடங்குகிறார் எங்கள் பிரதம மந்திரி திரு. டி. எஸ். சேனநாயகா. ஆனால் நாம் அவரைத் திட்டமாக இன்ன ரகம்தான் என்று சொல்ல முடியாது. காரணம்? சில சமயங்களில் அவர் மூன்று பிரிவையும் ஒத்திருக்கின்றார்.

பாலப் பருவத்தில் திரு சேனநாயகா செயின்ற் தோமஸ் கலாசாலையில் கல்வி பயின்றார். அக்காலங்களில் அவர் தமது வகுப்புக்குக் கலேயில் சென்ற ஒரு தமிழ் மாணவனைப் பிடித்து நாலு அடி கொடுப்பாராம். இது உண்மையான விஷயம் என்றே அவருடன் ஏககாலத்தில் கல்வி பயின்ற ஒரு தமிழன் எமக்குச் சொன்னார். பின்பு இலங்கை அரசியலில் ஈடுபட்டார். அப்பொழுது செய்த கருமங்கள் யாவும் தமிழருக்கு விரோதமாகவே இருந்தன.

இப்பொழுது புதிய சோல்பரி அரசியல் திட்டத்தின்படி இலங்கையின் பிரதமராக நியமிக்கப்பட்டிருக்கின்றார். செய்வது முழுவதும் தமிழருக்குப் பொருந்தாத கருமங்கள்தான்.

நேற்று அவருக்கு தெமட்டக்கொடையில் சிங்கள மக்கள் ஒரு உபசாரம் நடத்தினார்கள். அச்சமயத்தில் அவரின் சகமந்திரியான திரு ஏ. ஈ. குணசிங்கா அவரைத் துட்டகமுனுவின் அவதாரம் என்று குறிப்பிட்டுப் புகழ்ந்தார். இந்த நவீன துட்டகமுனுவுடன் ஒரு நவீன நீலனும் இருந்ததாகத்தான் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. நவீன நீலனும் நல்ல சேனாபதிதான்! ஆகவே இனி தமிழ் மக்கள் மீது நேரடியாகப் படையெடுப்பது ஒன்றுதான் மீதமாக இருக்கின்றது. இதையும் ஒரு வேளை நடத்தி விடுவாரோ என்று சில போலித் தமிழ் மக்கள் பயந்துதான் நேற்று முன்தினம் ஒரு கூட்டத்தையும் முன் கூட்டியே கூட்டினார்கள் போலும். அக்கூட்டத்தில் தமிழ் மக்களால் பேசவொட்டாது மும்முறை தடுக்கப்பட்ட பிரகஸ்பதிதான் நவீன நீலனாகச் சேர்ந்திருக்கிறார். ஆகவே யானை ஒன்றைத் தேடிக் கொண்டு யுத்தத்திற்குப் புறப்படவும் கூடும்.

ஆனால் தமிழ் இனம் எத்தனையோ துட்டகமுனுக்கள் நீலன்களைப் பார்த்தவர்கள். இன்றுவரை அழியாமல் இருப்பவர்கள். ஆகவே நாம் பயங்கொள்ளத் தேவையில்லையென்று திடமாகக் கூறிவிடலாம்.

ரத்தினபுரிக்கருகே நீர் வீழ்ச்சி மின்சாரத் திட்டம்

அமுல் நடத்துவதுபற்றி ஆரம்ப பரிசோதனைகள்

கொழும்பு, டிச. 1

இப்பொழுது நோட்டன் பிரிட்ஜ் பகுதியில் அரசாங்கத்தினால் நடத்தப்படும் நீர் வீழ்ச்சி மின்சாரத் திட்டத்துடன் புதிதாக வேறும் நீர் வீழ்ச்சி மின்சாரத்திட்ட வேலைகளைச் செய்வதுபற்றி அரசாங்கம் ஆலோசித்திருந்தது. இதன்படி இப்பொழுது ரத்தினபுரி பகுதியில் நீர்வீழ்ச்சி மின்சார திட்டமொன்றை ஆரம்பிப்பது பற்றி ஆரம்ப பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பொழுது வேலை நடந்துவரும் நீர்வீழ்ச்சி மின்சாரத் திட்டத்தைக் கொண்டு முழுத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாதென்றும், புதுத் தேவைகளையும் பூர்த்திசெய்யக் கூடிய முறையில் வேறும் மின்சார உற்பத்தி திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கருதப்படுகிறது.

ரத்தினபுரியிலிருந்து சிறித தூரத்தில் உள்ள நீர்வீழ்ச்சியொன்றை இதற்கு உபயோகிப்பதுபற்றி ஆலோசிக்கப்படுகிறது. சுமார் 100 அடி உயரத்திலிருந்து ஜலம் விழுகிறது. இதனை உபயோகிப்பதுபற்றி நிபுணர்களின் ஆலோசனைகள் கோரப்படுகின்றன. ஆரம்ப பரிசோதனைகளும் நடக்கின்றன.

அழுகிய நிலையில் ஆண் குழந்தையின் பிரேதம்

சந்தேகத்தின் மீது ஒரு பெண்ணுக்கு ரிமாண்டு

கொழும்பு, டிச. 1

மீரிகம பகுதியில முருகப்போவலில் ஒரு ஆண்குழந்தை கொலை செய்யப்பட்ட சம்பவம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எச். பி டொன்சியா என்டவருக்குச் சொந்தமான காணிக்குள் உள்ள ஒரு மலகூடத்தில் ஒரு ஆண் குழந்தையின் பிரேதம் அழுகிய நிலையில கிடந்து கண்டுபிடிக்கப்பட்டது. டொன்சியா என்டவருடைய மகள் ஏ. பி மகி என்பவர் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்திருக்க வேண்டுமென்று பலதடவைகளிலும் சந்தேகிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. பிரேத விசாரணையின்போது குழந்தை கொலை செய்யப்பட்டதாக தெரியவந்தது. மரண விசாரணை அதிகாரி மரணத்துக்குரிய காரணத்தை தெரிவிக்கவில்லை. சந்தேகத்தின்மீது மகியை ரிமாண்டில் வைத்துள்ளனர். புலன் விசாரணை நடைபெறுகிறது.

இந்தோனேஷியர்-டச்சு அதிகாரிகள் சமரசம்

ஐ. நா. சமரச சபையின் அமெரிக்க அங்கத்தவர் கோரிக்கை

பட்டேவியா, டிச. 1

இந்தோனேஷிய குடியரசுக்கும்-டச்சு அதிகாரிகளுக்கும் இடையில் சமரசம் செய்து வைக்க ஐ நாடுகள் ஸ்தாபனத்தினால் அனுப்பப்பட்ட சமரச சபையின அமெரிக்க அங்கத்தவர் டாக்டர் பிராங்க் கிரஹாம் ஜோக்ஜகர்த்தாவிலிருந்து ரேடியோவில் பேசுகையில் இரு பகுதியினரும் ஒற்றுமையாக ஒரு சமரச முடிவுக்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

ஒருவர் குத்திக் கொலை

எதிரிகள் கைதுசெய்யப்படவில்லை

கொழும்பு, டிச 1

பஹவாயம் புல்கொடா என்னுமிடத்தில் எம். எஸ விக்கிரம ஆராய்ச்சி என்பவர் குத்திக் கொலைசெய்யப்பட்டதாகவும் அவரது பிரேதம் கந்த காபாபு சந்தியில் கிடப்பதாகவும் கூறப்படுகிறது. இதில் சம்பந்தப்பட்ட எதிரிகளான பி. எம். எட்வின் சிலோ, விக்டர் ஆகியவர்கள் கைதுசெய்யப்படவில்லையென்று கூறப்படுகிறது.

ஹஜ்ஜு யாத்திரீகர்களுக்கு வரவேற்பு

துறைமுகத்தில் ஜனத்திரள்

கொழும்பு, டிச. 1

மக்காவுக்கு யாத்திரை சென்றிருந்த ஹஜ்ஜு யாத்திரீகர்கள் நேற்று கொழும்பு துறைமுகத்தில் வந்திறங்கினர். கொழும்பு துறைமுகத்தில் ஏராளமான மக்கள் குழுமியிருந்தார்கள். கோஷா முறைகள் முதல் தற்கால நாகரீகத்தைத் தழுவிய முறைகளால ஸ்திரீகள் ஆடைகள் அணிந்திருந்தனர். துறைமுகத்துக்கு வெளியே ஏராளமான கார்கள் அலங்கரிக்கப்பட்டு நிறுத்தப் பட்டிருந்தன. ஹஜ்ஜு யாத்ரீகர்களைத் தரிசிக்க ஏராளமான முஸ்லிம்கள்—ஆண்களும் பெண்களும் குழந்தைகளும்—துறைமுகத்தில் கூடியிருந்தனர்.

ஜித்தாவில் இருந்து வந்த கப்பலில் இருந்து யாத்ரீகர்கள் கரையில இறங்கினர். உற்றார் உறவினர்கள் யாத்திரீகர்களைச் சந்திக்க ஆர்வத்துடன் உட்சென்றனர். கொழும்பு டிபுடி மேயர் ஜனாப் எம். எப். கனியும் இலங்கை ஹஜ யாத்திரீகர்கள் கமிட்டி அங்கத்தினரும் துறைமுகத்துக்கு வந்து யாத்ரீகர்களை வரவேற்றனர்.

கடந்த செப்டம்பரில் இங்கிருந்து புறப்பட்ட யாத்திரீகர்கள் இடவசதி, உணவு வசதி முதலியவற்றால் கஷ்டப்பட்டிருப்பினும் அவர்கள் திரும்பி வருகையில் சந்தோஷமாக வந்துசேர்ந்தனர் என்று ஜனாப் கனி தெரிவித்தார். இந்த கோஷ்டியில் இருந்த பெருந்தொகையான பெண்களும சந்தோஷமாகவே யாத்திரை சென்று திரும்பியுள்ளனர் என்றும் யாத்திரை சென்ற இரு வயதானவர்கள் படுக்கையில இருப்பதாகவும் அவர்களைத் தூக்கிச் செல்லவேண்டுமென்றும் மேலும் அவர் தெரிவித்தார்.

துறைமுக அதிகாரிகளையும், போலிஸாரையும் பாராட்டி ஜனாப் கனி பேசுகையில் அடுத்த வருடத்துக்கு இலங்கையில் இருந்தும் தென்னிந்தியாவில் இருந்தும் சுமார் 500 யாத்ரீகர்களை யாத்திரைக்கு அனுப்புவதற்கு ஏற்பாடுகள் செய்ய ஆலோசித்திருப்பதாகவும் கூறினார். தென்னிந்திய யாத்ரீகர்களுக்கு இன்று புறக்கோட்டையில் வரவேற்பளிக்கப்பட்டது.

ரயில்வே ஜெனரல் மானேஜருக்கு பாராட்டு

தோட்ட முதலாளிகள் சங்கக் கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு, டிச. 1

இலங்கை தோட்ட முதலாளிகள் சங்கக் கூட்டமொன்று நடைபெற்றபோது சமீப வெள்ளப்பெருக்கு காலத்தில் இலங்கை ரயில்வே போக்கு வரத்து ஒழுங்காக நடத்தப்பட்டதைப் பாராட்டி ஜெனரல் மானேஜருக்கு வாழ்த்து அனுப்புவதாக தீர்மானிக்கப்பட்டது.

வெள்ளப் பெருக்கின் பின் பாதிக்கப்பட்ட ரயில் பாதைகளை சீக்கிரமே திருத்தியமைத்து ரயில் போக்கு வரத்தை ஒழுங்கு நிலைக்கு கொண்டு வந்ததை பாராட்டுவதாக இச்சங்கம் ரயில்வே ஜெனரல் மானேஜர் திரு. போடஜர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

விமான விபத்தில் எண்மர் மரணம்

சியத்தலை, டிச. 1

அலாஸ்காவில அன்னெட்டே தீவில இருந்து வந்த விமானமொன்று இறங்கும்பொழுது வீழ்ந்து நொருங்கி தீப்பிடித்துக் கொண்டதால் விமானத்தில் இருந்த 28 பிரயாணிகளில் எண்மர் கொல்லப்பட்டிருக்கவேண்டுமென்று கூறப்படுகிறது. பாதுகாப்பு வேலையில் ஈடுபட்டோர் ஒரு பெண்ணையும் குழந்தையையும் காப்பாற்றினர் என்றும் விமானிகள் இருவர் தப்பியுள்ளனர் என்றும் கூறப்படுகிறது. [ராய்ட்டர்]

ஸ்ரீமதி. விஜயலட்சுமி பண்டிட்

இந்தியா திரும்புகிறார்

பீல்டுமார்ஷல் ஆச்சின்லெக் இத்தாலிக்குப் பயணம்

இந்தியா-பாகிஸ்தான் கூட்டுராணுவ பிரதம தளபதி பதவி ரத்து

டில்லிக்கு பர்மா பிரதம மந்திரி, அந்நிய நாட்டு மந்திரி விஜயம்

புதுடில்லி, நவ. 30

இந்தியா—பாகிஸ்தான் கூட்டு ராணுவப் பிரதம தளபதியான பீல்டு மார்ஷல் சர் கிளாட் ஆச்சின்லெக் இன்று தனது பதவியை விட்டு விலகிக் கொண்டார். இத்தாலியில் போய் குடியேறும் பொருட்டு அவர் இத்தாலிக்குப் புறப்பட்டுச் சென்றார்.

சர் ஆச்சின்லெக் 1943 ஜூன் மாதம் இந்தியாவின் பிரதம தளபதியாக நியமிக்கப்பட்டார். 1947 பெப்ரவரி மாதம் அவர் இந்தியா-பாகிஸ்தான் கூட்டு ராணுவப் பிரதமதளபதியாக இந்தியா பிரிவினைக்கு முன்னதாகவே நியமிக்கப்பட்டார். இந்திய ராணுவத்தில் அவர் 44 வருட காலம் சேவை செய்தவர். அவருக்கு வயது 63

இந்தியா-பாகிஸ்தான் ஒத்துழைப்பு இல்லாதபடியால், கூட்டு ராணுவம் கலைக்கப்படுமென்றும் கூட்டு ராணுவப் பிரதம தளபதி பதவியும் நீக்கப்படுமென்றும் இருவாரங்களுக்கு முன்பு பிரிட்டிஷ் சர்க்கார் அறிவித்திருந்தனர்.

பர்மா பிரதமர் டில்லி விஜயம்

புதுடில்லி, நவ. 30

பர்மா பிரதம மந்திரி தக்கின் நு வும் பர்மா அந்நியநாட்டு மந்திரி உ டின்டுட்டும் இந்திய சர்க்காருடன் பர்மாசர்க்கார் உடன்படிக்கை செய்வது சம்பந்தமாக சமரசப் பேச்சுவார்த்தை நடத்த நாளை இங்கு வந்து சேருவார்கள். இந்தியாவுக்கும் பர்மாவுக்குமிடையேயுள்ள பிரச்னைகளையும் பற்றி அவர்கள் இந்தியாபிரதமர் பண்டித ஜவஹர்லால் நேருவைக் கலந்து பேசுவார்கள். அவர்கள் டில்லியில் மூன்று தினங்கள் தங்கியிருப்பார்கள். இந்தியா குடியேற்ற பிரச்னை, இந்தியா-பர்மா வர்த்தகம், பர்மாவிலுள்ள இந்தியர்களின் வர்த்தக உரிமைகளின் பாதுகாப்பு ஆங்கிலோ-பர்மா வர்த்தகஉடன்படிக்கையின்படி பர்மாவில் ஆங்கில வர்த்தகர்களுக்கு அளிக்கப்படும் உரிமைகளைப்போல இந்திய வர்த்தகர்களுக்கும் அளிப்பது, இந்தியாவுக்கு பர்மா அரிசி ஏற்றுமதி செய்வது, பர்மாசுதந்திரமடைந்தபின் பர்மாவுக்கும் இந்தியாவுக்குமிடையே ஏற்படும நிலைமைகள் முதலிய விஷயங்கள் பற்றி ஆலோசனை நடைபெறும். இந்தியர் குடியேற்றம் சம்பந்தமாக தெளிவான நடவடிக்கைகள் வகுப்பதுபற்றி ஆலோசிக்கப்படும்.

இம்மகாநாட்டுக்குப்பின் இரு நாடுகளுக்குமிடையேஇரு சர்க்கார்களும் சேர்ந்து இரு நாடுகளுக்குமுள்ளபிரச்னைகளை தீர்த்துக் கொள்வதற்கு நிபுணர்கள் கமிட்டி ஏற்படுத்துவது சம்பந்தமாகவும் ஆலோசிக்கப்படும்.

காஷ்மீர் போர்

ஜம்மு, நவ. 30

அக்னூருக்கு 20 மைல் மேற்கே படையெடுத்து வந்த 400 எதிரிகளை இந்தியத் துருப்புகள் தாக்கி 30 பேர்களைக் கொன்றன. 50 பேர்களுக்கு சேதம் விளைவித்தன. 4 மணி நேரம் நடைபெற்ற போராட்டத்தில் எதிரிகள் பீரங்கிகளையும் டாங்கி எதிர்ப்பு ஆயுதங்களையும் உபயோகப்படுத்தினர்.

அக்னூர் பிரதேசத்தில் எதிரிகள் கிராமங்களை அழித்துவிட்டுத் தப்பியோடினர். கோட்லீ பிரதேசத்தில் இந்தியத் துருப்புகள் அபாயத்துக் குள்ளிருக்கும்போது ஜனங்களை பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தின.

ஜான்கரில் துருப்புகள் பந்தோபஸ்து செய்கின்றன. பூஞ்ச், ஊரி பிரதேசங்களிலும் பந்தோபஸ்து செய்கின்றன. மீர்பூர் பிரதேசத்தில் இந்திய ராணுவ விமானங்கள் எதிரிகளின் கூட்டத்தைச் சிதறடித்து 20 பேர்களைக் கொன்று 4 லொறிகளைச் சேதப்படுத்தின. சுசேத்கருக்கு 10 மைல் தூரத்திலுள்ள அரினுவில் எதிரிகள் வந்து கூடுவதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. இவர்கள் ஜம்முவுக்கு தெற்கே 25 மைல் தூரத்திலுள்ள சயால் கோட் வழியாக எதிரிகள் வருவதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

ஜம்முவில் ஐந்து அகதிகள் நேற்றிரவு கொலை செய்யப்பட்டதால அங்கு ஊரடங்குச் சட்டம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. ஊரடங்குச் சட்டத்தை மீறிய 12 பேர்கள் கைதியானார்கள்.

பிரிட்டிஷ் பத்திரிகையின் ரஷிய பீதி

லண்டன் நவ 30

பிரிட்டிஷ் கன்சர்வேடிவ் பத்திரிகையான "சண்டே டைம்ஸ்" பின்வருமாறு எழுதுகிறது:-

காஷ்மீர் சம்பந்தமாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமுள்ள தகராறைத் தீர்க்க சமரச ஒப்பந்தம் மட்டும் போதாது, ராணுவ ஒப்பந்தம் ஏற்படவேண்டும். இந்தியாவுக்கும் பாகிஸதானுக்குமிடையே ஏற்படும் போராட்டத்தில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பலத்திற்குப் பங்கம் ஏற்படும். காஷ்மீரின் வடக்கு எல்லைப்புறமானது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கும் ரஷியாவுக்குமிடையேயுள்ள எல்லையாகும். ஆகவே இது சம்பந்தமாக சரியான நிலையை உண்டுபண்ண பிரிட்டன் முயற்சிக்கவேண்டும்.

லார்டு மவுண்ட்பேட்டன் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருப்பதால், பாகிஸதான் இது விஷயத்தில் பிரிட்டனுடன் மனம் விட்டுப் பேச பாகிஸ்தான் சந்தேகப்படுவதாகத் தெரிகிறது.

ஸ்ரீமதி. விஜயலட்சுமி பண்டிட் இந்தியா திரும்புகிறார்

நியூயார்க், டிச. 1

ஐக்கிய தேச பொதுச் சபைக் கூட்டம் முடிவுற்றுவிட்டதால் இந்தியாவின் பிரதிநிதி கோஷ்டித் தலைவியாக வந்திருந்த ஸ்ரீமதி. விஜயலட்சுமி பண்டிட் நேற்றிரவு இந்தியாவுக்குப் பயணமானார். அப்பொழுது அவர் தெரிவித்ததாவது:- ஐக்கிய தேசக் கொள்கைக்கேற்ப இந்தியா சற்றும் பிசகாமல நடந்துகொண்டது என்ற திருப்தியுடன் நான் இந்தியா திரும்புகிறேன். இந்தியா பெரும் பாரதூரமான பிரச்னைகளைத் திறமையுடனும் தீரமாகவும் சமாளித்து வருகின்றது. இந்தியாவும் ஏனைய ஆசிய நாடுகளும் தங்களது பொருளாதார சமூகப் பிரச்னைகளை எவ்வளவு துரிதமாகத் தீர்க்கின்றனவோ அவ்வளவு துரிதமாக உலகத்திற்கு சுபீட்சம் ஏற்படும். ஏனைய கண்டங்களின் பொருளாதாரப் பிரச்னைகள் எவ்வளவு முக்கியமானவையோ அவைகளைவிட அதிக முக்கியமானவை ஆசியாவின் பிரச்னைகள்.

ஐக்கியதேச பொதுச் சபைக் கூட்டமானது உலகில் இரு பெரும் வல்லரசுகளுக்கிடையேயுள்ள பாரதூரமான வித்தியாசங்களை அம்பலப்படுத்தியது. அதனால் முக்கியப் பிரச்னைகள் யாவும் ஏனைய பிரதிநிதிகள் தங்கள் மனச்சாட்சிப்படி நியாயமாக நடந்துகொள்ள முடியாதபடி பலவந்தத்திற்குள்ளாக வேண்டியதாக இருக்கிறதென்பதையும் அது உலகுக்கு நிரூபித்துக் காட்டிவிட்டது.

சபையின்விவாதங்களிலும் தகராறுகளிலும் இந்தியாவானது பாரபட்சமாக எந்தப் பக்கமும் சேராமல் நியாயத்திற்குப் பொருந்த தன் மனசாட்சியின்படி நடந்து கொண்டது. பாதுகாப்பு சபையில் இந்தியா - உக்ரைன், தேர்தல் போட்டியிலிருந்து இந்தியா விலகிக் கொள்ளும்படி நேரிட்டதும்; தென் ஆபிரிக்காவின் வர்க்கத் துவேஷப் பிரச்னையில் செல்வாக்குள்ள பிரதிநிதிகள் முட்டுக்கட்டை போட்டு, சபை நியாயமான தீர்ப்பளிக்க முடியாதபடி தடுத்ததும் மிகவும் துக்ககரமான சம்பவங்கள்.

இதசம்பந்தமாக ஐக்கிய தேச சபை தனது சாசனக் கொள்கையைக் காக்க கூடிய சீக்கிரம் நியாயமான தீர்ப்பளிக்க வேண்டிய காலம் வந்துவிடும்.

ஸ்ரீமதி. விஜயலட்சுமி பண்டிட் தனது இளைய குமாரி ரீதாவுடன் பம்பாய்க்குப் புறப்பட்டார். அவர்களுடன் வாஷிங்டன் ஸ்தானிகத்தைச் சேர்ந்த ராணுவ அதிகாரி கர்னல் பி. எம். கவுலும் இந்திய சர்க்காருடன் ஆலோசனை நடத்துவதற்காகப் புறப்பட்டுச் சென்றார். அவர்கள் புதன்கிழமையன்று பம்பாய் போய்ச் சேருவார்கள். இந்தியாவில் சில தினங்கள் தங்கிவிட்டு ஸ்ரீமதி. விஜயலட்சுமி மாஸ்கோ செல்வார். அங்கு அவர் ஸ்தானிக வேலையை ஒப்புக்கொள்வார் (ராய்ட்டர்)

ரத்மலானையில் டிரக் புரண்டது

18 தொழிலாளர் ஆஸ்பத்திரியில் அனுமதி

கொழும்பு, டிச. 1

மொரட்டுவையை நோக்கித் தொழிலாளர்களை ஏற்றிச் சென்று கொண்டிருந்த ஒரு மோட்டார் டிரக் ரத்மலானையில் புரண்டு ஒரு தேனீர்க் கடைக்கு மேல் விழுந்ததால கடையிலிருந்த இருவரும் டிரக்கில் பிரயாணம் செய்த 16 தொழிலாளரும் படுகாயங்களடைந்தனர் என்று கூறப்படுகிறது. காயமடைந்த 18 பேர்களும் இப்பொழுது ஆஸ்பத்திரியில படுகாயங்களுடன் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மோட்டார் டிரக் ரத்மலானை வீதியில் நேற்றிரவு சுமார் 1 மணிக்குச் சென்று கொண்டிருக்கையில் ரஸ்தாவின் குறுக்கே சென்ற ஒரு மாட்டுடன் மோதுவதைத் தடுப்பதற்கு டிரைவர் டிரக்கை திருப்பியபோது வழுக்கி மோட்டார் டிரக் பக்கத்தில் இருந்த தேனீர்க்கடைமீது புரண்டுவிட்டது என்றும் இதனால் டிரக்கில் இருந்த தொழிலாளர்கள் வெளியே தூக்கியெறியப்பட்டார்கள் என்றும் கடைக்குள் இருந்த இருவர் இடிபாடுகளிடையே இருந்து படுகாயங்களுடன் வெளியே எடுக்கப்பட்டனர் என்றும் தொழிலாளர்கள் எல்லோரும் படுகாயமடைந்தனர் என்றும் கூறப்படுகிறது. மோட்டார்டிரக்கின் சாரதி மட்டும் காயமடையவில்லை. டிரைவரை போலிஸார் கைது செய்துள்ளனர்.

பக்கிங்ஹாம் கால்வாய்க்கும் விமோசனம்

நாகப்பட்டணம் கால்வாயுடன் இணைக்க திட்டம்

சென்னை, நவ 29

சென்னையில் ஓடும் பக்கிங்ஹாம் கால்வாயை நாகப்பட்டணம் வேதாரண்யம் கால்வாயுடன் இணைக்கும் உத்தேசம் சர்க்காருக்கு இருப்பதாக இன்று அசெம்பிளியில் சர்தார் வேதரத்னம் பிள்ளையின் கேள்விக்கு மராமத்திலாகா மந்திரி பதிலளிக்கையில் கூறினார்.

அரசாங்கத்திற்கு விரோதமான குற்றங்கள்

அடக்குவதற்கு புதிய சட்டம் இயற்ற ஆலோசனை

கொழும்பு, டிச. 1

அரசாங்கத்துக்கு மாறாக சதிச்செயல் குற்றங்கள் புரிவோரை அடக்குவதற்காக இலங்கைச் சட்டங்களை திருத்தியமைப்பதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்வதாக அறியப்படுகிறது. இப்பொழுது தீர்மானித்துள்ள தொழிற்சங்க சட்டத்தின்படி பொது அரசாங்க ஊழியர்களுக்கு அதிகப்படியான உரிமைகள் வழங்குவது சம்பந்தமாக இந்த சட்ட நடவடிக்கைகள் அவசியமென்று அரசாங்கம் கருதுவதாக அறியப்படுகிறது.

டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் பிரதம காரியதரிசியாக இருந்த ஸர். ராபர்ட் டிரைட்டன் அப்பொழுதிருந்த மந்திரி சபைக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் அரசாங்கத்துக்கு மாறாகவோ அல்லது சமூகத்துக்கு இடைஞ்சல் விளைவிக்கும் முகமாகவோ நடத்தப்படும் நடவடிக்கைகளை அடக்குதற்கு இலங்கைச் சட்டங்கள் தகுதியானவைகளாக இல்லை என்றும் அவை திருத்தப்பட வேண்டுமென்றும் தெரிவித்திருந்தார். புதிய அரசியல் திட்டம் அமுலுக்கு வரும்வரையும் இதன் மீது எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை ஒத்திவைக்கப்பட்டிருந்தது. இப்பொழுது புதிய பாராளுமன்றம் பதவிக்கு வந்திருப்பதால் இதில் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் ஆலோசித்துள்ளது.

துறைமுகத்திலிருந்து களவுபோகும் பொருட்கள்

இறக்குமதியாளர் வரி கொடுக்க வேண்டியதில்லை

கொழும்பு, டிச. 1

இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் துறைமுகப் பகுதியில் உள்ள ஸ்டோர்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டபின் காணமல் போய்விட்டாலும் அப்பொருள்களுக்கும் இறக்குமதியாளர் வரி கொடுக்கவேண்டும் என்பதுபற்றிய பிரச்னையை அட்டார்ணி ஜெனரலிடம் சுங்க இலாகா அதிகாரி தெரிவித்தார்.

சமீபத்தில் ஒரு வர்த்தகராய் 372 பார்சல்களில் ஜவுளி வகைகள் இலங்கைக்குத் தருவிக்கப்பட்டிருந்தது. இப்பார்சல்கள் துறைமுகத்தில் இறக்கப்பட்டு துறைமுக ஸ்டோர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தன. இப்பார்சல்களில் ஒன்று காணமல் போய்விட்டது. இதற்கும வரி கொடுக்க வேண்டுமென சுங்க அதிகாரி தெரிவித்திருந்தார்.

அட்டார்ணி ஜெனரல் இப்பிரச்னைபற்றி நன்கு விசாரித்துவிட்டு துறைமுகப்பகுதியில் காணமல்போகும் பொருள்களுக்கு இறக்குமதியாளர் வரி கொடுக்கவேண்டியதில்லையென்று கூறிவிட்டார்.

நவீன துட்டகமுனுவுக்கு தெமட்டக்கொடையில் வரவேற்பு

கொழும்பு, டிச 1

சென்ற ஞாயிற்றுக்கிழமை திரு. டி எஸ். சேனநாயக்காவுக்கும் அவரது சகாக்களுக்கும் தெமட்டக்கொடை வாசிகளாலும் மற்றுமங்குள்ள புத்த சங்கங்களாலும் தெமட்டக்கொடை விளையாட்டிடத்தில் வரவேற்பளிக்கப்பட்டது. சேனநாயக்கா முதலியோரோடு திரு சுந்தரலிங்கமும் காணப்பட்டார். இவர்கள் மருதானையிலுள்ள ஸாஹிரா கல்லூரியிலிருந்து கண்டி நாட்டியக்காரர் முன் செல்ல ஊர்வலமாக மேற்குறித்த இடத்துக்குச் சென்றதும் ஒரு புத்த குரு அவர்கள் சமயாசாரப்படி இவர்களுக்கு "பன்சில்" வழங்கப்பட்டது. அதன் பின்னர் "தேசிய கீதய" பாடப்பட்டு சிங்கக் கொடி உயர்த்தப்பட்டதும் வருண பகவானுக்கு மனம் பொறுத்து மழை பெய்யத் தொடங்கியது. பேச்சாளர்களான திரு. டி பி ஜாயாவும் திரு ஏ. ஈ குணசிங்காவும் திரு. சேனநாயக்காவை துட்டகமுனுவுக்கு ஒப்பிட்டுப் பேசினார்கள்.

மழை அதிகம் பெய்ததமையால் கூட்டம் அதிக நேரம் நடத்தப்படவில்லை.

வேலை நிறுத்தத்தை சமாளிக்க விசேஷ அதிகாரங்கள்

பிரஞ்சு பாராளுமன்றத்தின் 35 மணிநேரக கூட்டம்

ரயிலைக் கவிழ்க்க கமியூனிஸ்டுகள் சதி

பாரிஸ், டிச 1

பிரஞ்சு பாராளுமன்றம் இன்று மீண்டும் கூடுகிறது, 20 லட்சம் தொழிலாளர் வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெற்றுவருவதால் நாட்டில் பல தொழில்களும் போக்குவரத்துகளும் ஸ்தம்பித்துப்போயிருக்கின்றன. நேற்று தொழிலாளர்களுடன் சமரசப்பேச்சுக்கள் சர்க்கார் நடத்தினர் சமரசம் ஏற்படவில்லை. ஆகவே சர்க்கார் தங்களுக்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள விசேஷ அதிகாரங்கள் அளிக்கும் மசோதாவைப் பாராளுமன்றத்தில் கொண்டுவந்தனர். அதன்படி அந்த மசோதாவில் மேலும் 80 ஆயிரம்பேர்கள் கொண்ட படை திரட்டுவதற்கு சர்க்காருக்கு அதிகாரம் அளிக்கும் பகுதி நேற்று பாராளுமன்றத்தில் நிறைவேறியது அதற்கு சாதகமாக 404 வோட்டுகளும் பாதகமாக 184 வோட்டுகளும் கிடைத்தன. கமியூனிஸ்டுகள் இந்த மசோதா நிறைவேறுவதைத் தடுக்க 200 திருத்தப் பிரேரணைகளைக் கொண்டுவந்தார்கள் எல்லாத் திருத்தங்களும் தோல்வியுற்றன இன்று பாராளுமன்றம் மீண்டும் கூடி மீதமுள்ள பகுதிகளை நிறைவேற்றும் 35 மணி நேரம் விடாது கூட்டம் நடந்தது.

தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பும் அறிகுறிகள் தென்படுவதாக உள்நாட்டு மந்திரி தெரிவித்தார்.

நேற்று மார்செயில்ஸ் நகருக்கு அதிகமான துருப்புகளும் டாங்கிப்படைகளும் வந்துசேர்ந்தன. பொதுவாக சர்க்கார் படிப்படியாக பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தி வருகிறார்கள்.

சர்க்கார் விசேஷ அதிகார மசோதாவை வாபஸ்வாங்கிக்கொண்டு, டிசம்பர் முதல்தேதி முதல் வாழ்க்கைத்தர உயர்வுச் செலவுக்கேற்ப சம்பளம் கொடுக்க இசைந்தால் வேலை நிறுத்தத்தை வாபஸ் செய்வதாக தொழிலாளர் யூனியன் அறிவித்தது.

ரயில் விபத்து

ஜினிவா-பாரிஸ் எக்ஸ்பிரஸ் ரயில் வண்டி வியான்ஸ் நகரத்துக்கருகே தண்டவாளத்தை விட்டிறங்கியது. கமியூனிஸ்டுகள் சதிச் செயலாக இருக்குமென்று கருதப்படுகிறது. தண்டவாளம் பெயர்க்கப்பட்டிருந்தது. எஞ்சினும்சாமான்வண்டியொன்றும் கவிழ்ந்தன ஒரு பிரயாணி சிறிது காயமடைந்தார்.

கிருமி ஆராய்ச்சி நிபுணர் திரும்பினர்

கொழும்பு, டிச 1

கொழும்பு நகர கிருமி ஆராய்ச்சி நிபுணரான டாக்டர் இ. கே. வுட் விடுமுறையில் ஆஸ்திரேலியா சென்றிருந்தவர் திரும்பிவந்தார். க்ஷயரோக சம்பந்தமான புதிய வைத்திய முறையைக் குறித்து தகவல் சேகரித்துக்கொண்டுவந்திருக்கிறார். பி. ஸி. ஜி. திட்டம்பற்றி அவர் புகழ்கிறார். க்ஷயரோகம் வராது தடுக்க சந்தேகமுள்ள நோயாளிகள் உடனே எக்ஸ்ரே எடுக்க வேண்டுமென்பதைக் குறித்து ஜனங்களிடையே பிரசாரம் செய்யவேண்டுமென்று அவர் கூறுகிறார்.

"ஹெர்குலிஸ்"

கொழும்பு, டிச. 1

கொழும்புத் துறைமுகப் படகு 'ஹெர்குலிஸ்' புதன்கிழமையன்று திரும்பி வந்துசேரும். திருவனந்தபுரத்திற்கருகே விபத்திலகப்பட்ட 'பண்டிட்' கப்பல் பழுதுபார்க்கப்படும் வரை அங்கு தங்கியிருக்கும். பின்னர் 'பண்டிட்' கப்பலும் 'ஹெர்குலிஸும்' கொழும்புக்கு வரும் 'பண்டிட்' புறப்பட முடியாதிருந்தால் 'ஹெர்குலிஸ்' மட்டும் புறப்பட்டுவரும்.

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

இலங்கை பெறும் போலிச் சுதந்திரம்

பாராளுமன்றத் திறப்பு விழாவில் தென்பட்ட அறிகுறிகள்

யூனியன் ஜாக் கொடி உயரப்பறந்தது சிங்கக் கொடி பதுங்கிப் பறந்தது

"சுதந்திர" தினத்தில் கறுப்புக் கொடிதான் பறக்கும்

குருணாக்கல் தொகுதி பார்லிமெண்ட அங்கத்தவரான திரு ஸ்ரீநிசங்காவின் நேற்று வெளிவந்த "ஹெலதிவ" என்னும் சிங்களப் பத்திரிகை எழுதியிருப்பதின் தமிழாக்கம்:-

எங்களுடைய போலி ஜாதியபிமானிகளால் சிங்கக் கொடியை தேசியக் கொடியாக அரசாங்கக் காரியாலயங்களில் ஏற்றுவதற்காக எடுத்துக்கொண்ட உற்சாகமும்—பிரசாரமும்-நடவடிக்கைகளும் என்னவானதென்றும், இவையெல்லாம் வெளி வேஷக் கோலங்களே என்றும் 25-ம் தேதியன்று கொழும்பு நகரைச் சுற்றிப்பார்த்தவர்களுக்கு நன்கு புலப்படும் வழக்கம்போல அரசாங்கக் காரியாலயங்களில் பறக்கிற யூனியன் ஜாக் கொடியே அன்றும் பறந்து கொண்டிருந்தது. தந்தி-தபால் மந்திரியார் அன்று சொன்னது போலத்தான் இன்றும் குருத்தோலைகளைப்போன்று அங்குமிங்கும் சிங்கக் கொடியும் அலங்காரத்திற்காக உபயோகிக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து "டொமினியன் மூலாம்" பூசப்பட்ட கிடைக்கப்போகிற சுதந்திரமும் என்ன மூலையில் இருக்குமென்று அறிந்துகொள்ளலாம்.

வேறொரு நாட்டிற்கு சுதந்திர தினமென்றால்- கொடியேற்று விழாவென்றால்- நகரங்கள் கிராமங்கள் என்னென்ன மாதிரியான ஆரவாரங்களும் உற்சாகங்களும் கொண்டாட்டங்களும் நடந்திருக்கும். அன்றெல்லாம் தேவலோகம்போன்றிருக்குமே.

25ம் தேதியன்று பார்லிமெண்ட் கட்டிடத்தில் எல்லாவற்றிற்கும் உயரமாகப் பறந்தது சாம்ராஜ்யத்தின் யூனியன் 'ஜாக் கொடி'' யேயன்றி வாளேந்திய சிங்கக் கொடியல்ல

சிங்கக் கொடியன்றி வேறு கொடி உயர்த்தப்பட்டால், தனது பட்டாளங்களைக் கொண்டு சென்று பிடுங்கியெறிந்து ஒழித்துவிடுவேனென்று ஒரு நாள் மார்பு தட்டிய வீராதி வீரர்கள் இன்றெல்லாம் எங்கு சென்று ஒளிந்துகொண்டார்கள்? பழக்கத்திலிருக்கும் அரசாங்கக் கரன்ஸி நோட்டுகளுக்கிடையில் பதுங்கி ஒளித்து நடமாடும் கள்ள நோட்டுகள் போன்று அன்று சிங்கக்கொடி இடையிடையே பயந்து வியர்த்து சுருங்கி விழுந்துகொண்டிருந்தன. இதற்குக் காரணம் ஜாதிச் சிங்கள தலைவர்கள் தனக்குச் செய்த அவமானத்தை எண்ணி எண்ணி மனவருத்தப்பட்டதுபோலும் சிங்கக் கொடி!

ராணி மாளிகை, செனட் சபை, மற்றும் அரசாங்கக் காரியாலயங்கள் எங்குபார்த்தாலும் யூனியன் ஜாக்தான் உயரப்பறந்துகொண்டிருந்தது. அதற்குக் கீழேதான் சில இடங்களில் சிங்கக் கொடி ஏற்றப்பட்டிருந்ததெனினும், அக் கொடி தன் கம்பீரத் தோற்றத்துடன் விரிந்து பறக்கவில்லை. ஒரு சமயம் அந்த சித்திரக் கேசரியின் ஜீவ சக்தியை யூனியன் ஜாக் அபகரித்துக் கொண்டதுபோலும்!

தந்திக் கம்ப மந்திரியின் காரியாலயங்கள் சிறிய கொடியால் அலங்கரிக்கப் பட்டிருந்தது சிற்சில இடங்களில் இடையிடையே சிறிய சிங்கக் கொடிகளும் சொருகப்பட்டிருந்தது

பிரதம மந்திரியார் வாசம் செய்யும் "டெம்பல் டிரீஸ்" மாளிகை இருக்கும் காலி ரோட்டுப் பக்கமெல்லாம் எங்கேயும் சிங்கக் கொடிகள் காணப்படவில்லை. சிங்களத் தலைவரும் பிரதம மந்திரியாருமான திரு சேனநாயக்காவின் வாசஸ்தலத்திலும், வெள்ளைத் தோட்டக்காரர்களின் கிளப்பிலும் ஒரு சின்னஞ் சிறிய சிங்கக் கொடியாவது ஏற்றப்படவில்லை. அதற்குப் பதிலாக பிரதம மந்திரியின் முற்றத்திலிருக்கும் கொடி மரத்தில் யூனியன் ஜாக் கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது. "டெம்பல் டிரீஸ்" மாளிகை முதற்கொண்டு எல்லா முக்கிய கட்டிடங்களிலும் 'ஆனுபாவசம்பன்ன' யூனியன் ஜாக் கொடி அலங்கார தோற்றத்துடன் பறந்தது 'அபாக்கிய சம்பன்ன' சிங்கக் கொடி யூனியன் ஜாக் கொடியின் கீழ் சுருங்கி விழுந்துகொண்டிருந்தது.

இலங்கையிலே சிங்கக் கொடி ஏற்றுவோம் என்று மார்பு தட்டி வாய் வீரம் பேசியும், பொய்ப் பிரசாரங்களும் செய்து திரிந்த போலி சாதியபிமானி வீரர்கள், வெட்கித் தலை குனியும்படியும் பரிகசிக்கத் தக்கவிதமாகவும் சிங்கக் கொடிக்கு ஏற்பட்ட அவமானத்தையிட்டு பொது மக்களிடையே இன்னும் பெரிய சந்தேகங்கள் உண்டாகியிருக்கிறது. யூ. என். பி. கட்சி, டொமினியன் அந்தஸ்துக் கட்சி, சுயநலப் பணக்காரர் கட்சி, சேனநாயக்கா குடும்பக் கட்சி, வலதுசாரிகள் கட்சி ஆகிய எல்லாரும் தான் இந்த சிங்களக் கொடிக்கு உண்டான அவமானத்திற்கு காரணம் சொல்லியாக வேண்டும்.

பார்லிமெண்டு ஆரம்ப உற்சவத்திற்குப் பதிலாக புறக்கோட்டை அரச மரச்சந்திக் கருகில் கப்பல்களுக்கு கரிகேட்கிற, தண்ணீர் சப்ளைக்கு-தொழிலாளர் தேவைக்கு அறிகுறியாக ஏற்றப்படும் மூன்று கொடிகள் மிகவும் பிரபலமாக ஏற்றப்பட்டிருந்தது. மற்றப்படி சிங்கக் கொடியை, பிளாக் மார்கெட் வியாபாரமாக மாற்றிக் கொண்ட வியாபாரிகளே சில இடங்களில் ஏற்றியிருந்தார்கள். பொது மக்கள் 5000 பேர் இருக்கும் இடத்தில் இரண்டொரு சிங்கக் கொடிக்கு மேல் காணப்படவில்லை

இப்படியெல்லாம் சிங்கக் கொடிக்கு நடக்கிற மரியாதையைப் பார்க்கப் போனால் எதோ கிடைக்கப் போகிறதாகச் சொல்லப்படும் கறுப்புச் சுதந்திரம் கிடைத்தால் என்ன விதமாய் உற்சவங்கள் கொண்டாடப் போகிறார்களென்பது ஒருவருக்கும் தெரியாது ஆனால் அன்றைய தினத்தில் கறுப்புக் கொடி தேசமெங்கும் உயர்த்துவதற்கான இயக்கங்கள் நடந்து வருகிறதாகத் தெரிகிறது.

பார்லிமெண்டை திறந்து வைத்த பொழுது 'எனது அரசாங்கம்' 'எனது மந்திரிகள்' என்று கவர்னர் பேசியிருப்பதானது, எங்கள் தலைவர்களுக்கெல்லாம் பெரிய அவமானமாய் இருக்காதோ? இன்னும் என்னென்ன மாயா ஜாலங்கள் நடைபெறுமோ யார் கண்டார்கள்?

ஆனையிறவில் விநாயகராலயம்

ஆனையிறவு, நவ. 29

ஆனையிறவுத் திருத்தொண்டு பொதுச் சபையின் பேரால் ஆரம்பிக்கப்பட இருக்கும் ஸ்ரீவிநாயகப் பெருமானின் ஆலயத் திருப்பணியின் அத்திவாரம் இன்று (29-11-47) காலை 6 மணிக்குமேல் நிகழ்ந்த சுப முகூர்த்தத்தில் சபைத் தலைவர் திரு எஸ். சிவசுப்பிரமணியம் அவர்களால் இடப்பெற்றது.

ஜனநாயக சோஷலிஸ்டுகள் சேர்ந்த புதிய சர்வதேச ஸ்தாபனம்

அமைக்கவேண்டுமென அமெரிக்க ஐரோப்பிய பிரதிநிதிகள் அறிக்கை

அன்ட்வேர்ட், டிச. 1

சர்வதேச சோஷலிஸ்ட் மகாநாட்டுக்கு வந்துள்ள அமெரிக்க சோஷலிஸ்ட் கட்சி பிரதிநிதி திரு மௌரிஸ் ஜே. கோட்புளும் என்பவர் விடுத்துள்ள அறிக்கையொன்றில், எல்லா ஜனநாயக சோஷலிஸ்ட் கட்சிகளும் சேர்ந்த புதிய சர்வதேச சோஷலிஸ ஸ்தாபனமொன்றை அமைக்க வேண்டுமென்று தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய சோஷலிஸ ஜனநாயக சம்மேளன பிரதிநிதியும் இதனை ஆதரித்து ஒரு அறிக்கை விடுத்துள்ளார்.

ஜெர்மனியை இரண்டு பகுதியாக பிரிக்க வேண்டாம்

லண்டனில் இப்பொழுது கூடியுள்ள அயல்நாட்டு மந்திரிகள் மகாநாட்டுக்கு விடுக்கும் ஒரு கோரிக்கை தீர்மானத்தின் நகல் சர்வதேச சோஷலிஸ மகாநாட்டு அரசியல் கமிட்டியில் தயாரிக்கப்பட்டுள்ளது. அதில் ஜெர்மனியை இரண்டு பகுதியாகப் பிரிக்க வேண்டாமென்றும் அவ்விதம் பிளவுபடுத்தினால் உலகமே இரு பகுதியாகப் பிரிந்து இரண்டு எதிர்க் கட்சிகளாகிவிடுமென்றும் கூறியுள்ளது. இந்நகல் தீர்மானத்தில் ஆஸ்திரேலியாவுக்கு முழுப் பொறுப்பாட்சியையும்கொடுக்கவேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது. (ராய்ட்டர்)

சீன சர்க்கார் நெருக்கடியான நிலை

இரு பெரிய நகரங்களை கமியூனிஸ்டுகள் கைப்பற்றினர்

நாங்கிங், நவ 30

மஞ்சூரியாவிலும் வட சீனத்திலும் சீன சர்க்கார் வசமிருந்த இரு பெரிய ரயில்வே நகரங்களை கமியூனிஸ்டுகள் கைப்பற்றினர். யாங்ஸே போர்முனையில் சர்க்கார் துருப்புகள் எதிர் தாக்குதலை ஆரம்பித்தன சீன சர்க்கார் மீது நெருக்கடியான நிலைமையைச் சமாளிக்க வேண்டியதாக இருக்கிறது.

அமெரிக்க கடனுதவி

வாஷிங்டன், நவ 30

சீன சர்க்காருக்கு 6 கோடி டாலர் இடைக்கால கடனுதவி அளிப்பது பற்றி அமெரிக்கா ஆலோசித்து வருகிறது.

கிழக்கு ஐரோப்பிய சமஷ்டி அரசாங்கம்

ஏற்படுத்த முயற்சி

லண்டன், டிச 1

சோச்சி ஜியோர்ஜியாவிலே சமீபத்தில் சோவியத் மார்ஷல் ஸ்டாலினும் பல்கேரிய பிரதமர் ஜி. டிமிட்ரோவ் என்பவரும் சந்தித்து பேசியபோது கிழக்கு ஐரோப்பிய கமியூனிஸ நாடுகளை ஒரு தனி சமஷ்டி அரசாங்கத்தின் கீழ் கொண்டுவரப்படுவது பற்றி விவாதிக்கப்பட்டது. இத்தீர்மானம் சோவியத் நாட்டுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துமானால் 8 முதல் 9 கோடி ஜனத்தொகை கொண்ட சமஷ்டி அரசாங்கம் ஏற்படும். இத்தகவலை லண்டன் ஒப்சேர்வர்பத்திரிகை நிருபர் அறிவிக்கின்றார். (ராய்ட்டர்)

கைதடி சைவ இளைஞர் சங்கம்

சாவகச்சேரி, நவ 30

மேல்படி சங்கம் சர்வசித்து வருடம் புரட்டாசி மாசம் 30-ம் தேதி தொடக்கமாகக் கைதடி நகரில் வசிக்கும் சைவ இளைஞரால் தொடங்கப்பட்டு நடைபெற்றுவருகின்றது. அதன் நோக்கம் சமயத்தையும் கலையையும் வளர்ப்பதேயாகும்.

இச் சங்கத்தின் ஆறுவது கூட்டம் 23-11-47 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அத்தருணம் ஞான அறிவுடையவரும் சமய ஆசாரப்படி ஒழுகுபவருமான ஸ்ரீ செம்பொற்சோதீஸ்வரக் குருக்கள் அவர்களால் "விபூதி மகிமை" என்னும் விஷயம்பற்றி அதிக சிறப்பாக பேசப்பட்டது. (ந-நி)

அமெரிக்க ஸ்தானிகங்களை அராபியர் தாக்கினர்

பாலஸ்தீனத்தில் யூதர்கள் கொலை

மூன்றுதினங்கள் அராபியர்கள் வேலைநிறுத்தம்

யூதர் அரசாங்கத்தை நிறுவ ஐக்கிய தேச கமிஷன் முயற்சிக்கும்

ஜெருசலேம், டிச 1

ஐக்கியதேச சபை பாலஸ்தீனப் பிரிவினைத் தீர்மானத்தை நிறைவேற்றியிருப்பதை ஆட்சேபித்து அராபிய மேல் கமிட்டி பாலஸ்தீனத்தில் மூன்று தினங்கள் வேலை நிறுத்தம் செய்யும்படி அராபியர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறது யூதர்களைப் பகிஷ்கரிக்கவும் யூதர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ளும் அராபியர்கள் துரோகிகளாகக் கருதப்படுவார்கள் என்றும் கட்டளையிட்டிருக்கிறது.

பாலஸ்தீன எல்லையிலுள்ள அராபிய நாடுகளின் தலைவர்கள் கூடி ஆலோசனை நடத்திய பிறகு இன்று எகிப்து மன்னர் பாரூக் அராபிய லீக் காரியதரிசி அஸாம்பாஷாவைச் சந்தித்துப் பேசுகிறார்.

ஐக்கியதேச சபைத் தீர்மானம் அராபிய நாடுகளில் நெருப்பை எழுப்பும் என்று அவர் நேற்று தெரிவித்தார்.

ஏக்ரே சிறைச்சாலையிலுள்ள யூதக் கைதிகளை அராபியக் கைதிகள் தாக்கினர். சிறை அதிகாரிகள் அராபியர்களைச் சுட்டதில் மூன்று அராபியர் காயமடைந்தனர். இரு அராபியர்களைக் காணவில்லை.

அமெரிக்க ஸ்தானிகம் தாக்கப்பட்டது

சிரியாவில் டமஸ்கஸ் நகரிலுள்ள அமெரிக்க ஸ்தானிகத்தை சிரியா அராபியர்கள் தாக்கினர். அங்கிருக்கும் கமியூனிஸ்ட் கட்சிக் காரியாலயத்தைத் தீக்கொளுத்தினர். பெல்ஜிய ஸ்தானிகத்தையும் தாக்கினர்.

ஈராக்கில் பாக்தாத் நகரிலுள்ள அமெரிக்க ஸ்தானிகத்தை ஈராக் அராபியர்கள் தாக்கி அங்கிருந்த மூன்று மோட்டார் கார்களைத் தீக்கொளுத்தினர்.

ஜனங்களை அமைதியாக இருக்கும்படி வேண்டியும் பாலஸ்தீனத்திற்கு தனது கடமையை நிறைவேற்றுமென்று தெரிவித்தும் ஈராக் சர்க்கார் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்

டெல் அவிவ் நகருக்கருகேயுள்ள ரம்பே நகரில் 4 யூதர்கள் அராபியர்களால் கொலைப்பட்டார்கள்.

யூதர்களின் பஸ்களை அராபியர்கள் தாக்கியதால் பாலஸ்தீனத்தில் ஐந்து யூதர்கள் கொலையுண்டார்கள். 11 யூதர்கள் காயமடைந்தனர்.

யூதப் புரட்சி இயக்கத்தார் பாலஸ்தீன யூதர் நாட்டிலே இனி புரட்சி இயக்கத்திற்கு வேலையில்லை யென்றும் இனி பாலஸ்தீன முழுவதையும் விடுவிக்க வேலை செய்ய வேண்டுமென்றும் அறிக்கை வெளியிட்டது.

பிரிட்டன் சீக்கிரம் வெளியேறும்

லண்டன், நவ 30

பிரிட்டன் ஆகஸ்டு மாதத்திற்கு முன்பே கூடிய சீக்கிரம் பாலஸ்தீனத்திலிருந்து வெளியேறி விடுமென்று தெரிகிறது

ஐக்கிய தேச கமிஷன் நிர்வாகம்

நியூயார்க், நவ 30

பிரிவினைத் தீர்மானம் நிறைவேறி விட்டதால் இனி பொலிவியா, செக்கோஸ்லவேகியா, டென்மார்க், பனமா, பிலிப்பைன் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளடங்கிய பாலஸ்தீனக் கமிஷன் நியமிக்கப்படும். அதன் பிறகு பாலஸ்தீனத்தில் இக்கமிஷனின் நிர்வாகக்காரியாலயம் நிறுவப்படும். அநேகமாக இக்கமிஷன் டெல் அவிவ் நகரில் தலைமைக் காரியாலயத்தை நிறுவி யூதர் பாதுகாப்புப் படையுடன் சம்பந்தம் வைத்துக் கொள்ளும். அதன் பிறகு பிரிட்டிஷ் படைகள் வெளியேறும். பிரிவினைத் திட்டப்படி யூதர் அரசாங்கத்தை ஸ்தாபிக்க முதலாவது யூதர் வர்த்தக பொருளாதார ஸ்தாபனங்களுடன் கலந்து ஆலோசனை நடத்தும்.

அராபியர்கள் இக்கமிஷனுடன் ஒத்துழைக்கமாட்டார்களாதலால் அவர்கள் நெபுலஸ் நகரில் தலைமைக் காரியாலயத்தை நிறுவி அராபிய அரசாங்கம் ஏற்படுத்துவார்களென்று தெரிகிறது.

பாலஸ்தீனத்தைப் பிரிக்க ஐக்கிய தேச சபைக்கு அதிகாரமில்லையென்று அராபிய நாடுகளின் பிரதிநிதிகள் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். [ராய்ட்டர்]

போலிஸைத் தாக்கினர்

எதிரிக்குச் சிறைத் தண்டனை

சாவகச்சேரி, நவ. 29

அரசாட்சியாரின் விருந்திற்குத் தலைமறைவாகத் திரிந்த சாவகச்சேரி செல்லையா கனகசபை அல்லது குஞ்சுராஜா என்பவர் சாவகச்சேரிப் போலிஸ் பகுதியைச் சேர்ந்த (பி ஸி. 518) கறுப்பையா என்பவர் மேற்குறித்த எதிரியைக் கைதுசெய்யச் சென்றபொழுது மூன்று முறையாக குறித்த கறுப்பையாவை பயமுறுத்தி அடிக்கச் சென்று தடை செய்தார் என்ற குற்றங்களுக்கு சாவகச்சேரி கோர்ட்டில (6 மாதம், 3 மாதம், 3 மாதம்) மொத்தமாக ஒரு வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. (ந-நி)

ஈரான் மந்திரி சபையின் அவசர இரகசியக் கூட்டம்

தெஹிரான், டிச. 1

சோவியத்-ஈரான் எண்ணை உடன்படிக்கை (1946) நிராகரிக்கப்பட்டது சம்பந்தமாக சோவியத் நடவடிக்கைகளால் மந்திரி சபை நெருக்கடிக்குள்ளாகலாமென எண்ணி பிரதமர் நேற்று அவசரமாக மந்திரி சபைக் கூட்டமொன்றை கூட்டி இவ்விஷயம் பற்றி ஆலோசனை செய்துள்ளார். கூட்டம் இரகசியமாகவே நடைபெற்றது. (ராய்ட்டர்)

கடலில் மூழ்கி மாண்டார்

பிரிட்டிஷ் யுத்தக் கப்பலின் மாலுமி

திரிகோணமலை, டிச. 1

நேற்று 'பர்மிங்ஹாம்' என்ற பிரிட்டிஷ் யுத்தக் கப்பலில் வேலை செய்யும் இரு மாலுமிகள் கடலில் குளிக்கச் சென்றனர் ஒருவர் நீரோட்டத்தில் அகப்பட்டு கடலில் மூழ்கி விட்டார் மற்றொருவர் தப்பி வந்து கரை சேர்ந்தார், நேற்று மாலை கடலில் மூழ்கிய மாலுமியின் பிரேதம் கரையில் ஒதுக்கப் பட்டது. (ந-நி தந்தி)

மோட்டார் விபத்தில் புரொக்டருக்கு காயம்

களுத்துறை, நவ 29

நேற்றிரவு களுத்துறை புரொக்டர் திரு. ஜே. ஜி. டி சில்வா மோட்டார் விபத்தில் அகப்பட்டு முகத்தில் பலத்த காயமடைந்தார். ஆஸ்பத்திரிக்கருகே அவருடைய கார் அங்கு நின்று கொண்டிருந்த லொறியில் மோதியதால் காரிலிருந்த கண்ணாடிகள் உடைந்தன.

ஐக்கிய தேச பொதுச்சபை

கூட்டம் கலைந்தது

நியூயார்க், நவ 30

பாலஸ்தீனப் பிரிவினைத் தீர்மானம் நிறைவேறியதும் ஐக்கிய தேச பொதுச்சபைக் கூட்டம் முடிவுற்றது. கூட்டத்தை கலைக்கும் போது அதன் தலைவரான பிரேஸில் பிரதிநிதி டாக்டர் அரன்ஹா பின்வருமாறு தெரிவித்தார்:-

தென்னாப்பிரிக்காவில் இந்திய துவேஷம் பாராட்டப்படுவது சம்பந்தமான பிரச்னை பற்றி தென்னாப்பிரிக்காவுக்கும் இந்தியாவுக்குமுள்ள தகராறை இருநாடுகளும் சமரசமாகத் தீர்த்துக்கொள்ள முயற்சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்

ஐக்கிய தேச பொதுச் சபைக் கூட்டத்தைப்பற்றி பெரும்பாலான பிரதிநிதிகள் கீழ்க்கண்ட அபிப்பிராயம் கொள்கிறார்கள்.

கூட்டத்தில் புதிய தகராறுகள் பல ஏற்பட்ட போதிலும் பொதுவாக இக்கூட்டம் வெற்றிகரமாக முடிவுற்றிருக்கிறதென்றே சொல்லவேண்டும்.

இக்கூட்டத்தின் பயனாக கிரீஸில் கொரில்லாக்கள் யுத்தம் நடைபெறும் போது எல்லைப்புறங்களை கண்காணிப்பு செய்ய ஐக்கிய தேச ஸ்தாபனம் பால்கன் கமிஷனை நியமித்தது. கொரியா பொதுத் தேர்தலை மேற்பார்வையிட கொரியன் கமிஷனை ஏற்படுத்தியது. சிறு பொதுச்சபை ஒன்றை ஏற்படுத்த நிச்சயித்தது. பாலஸ்தீனத்தில் யூத, அராபிய அரசாங்கங்களை ஏற்படுத்த பாலஸ்தீன கமிஷனை நிறுவியது.

ஒரு ஐரோப்பிய பிரதிநிதி பின்வருமாறு அபிப்பிராயம் தெரிவித்தார்:- சிறு பொதுச்சபையில் காலி நாற்காலிகள்தானிருக்குமென்று கருதுகிறேன். ஏனெனில், சோவியத் ரஷியாவும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் இச்சபையைப் பகிஷ்கரிப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள் அதேபோன்று பால்கன் கமிஷனையும் கொரியன் கமிஷனையும் பகிஷ்கரிப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். பாலஸ்தீன கமிஷனை அராபிய நாடுகள் பகிஷ்கரிக்கும். (ராய்ட்டர்)

காட்டில் தொங்கிய பிரேதம்

இருவர் கைது

ரக்வான், நவ 28

ரக்வான் போலிஸ் பகுதியைச்சேர்ந்த கலகிறறிய என்னும் கிராமத்தில் மூன்று மாதங்களுக்கு முன் கொன்று காட்டில் தூக்கப்பட்டிருந்த ஓர் பிரேதத்தின் எலும்புக்கூடொன்று, அடையாளங் கண்டுபிடிக்க முடியாத நிலையில் ரக்வான் போலிஸாரால் 27-11-47 ல் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. சந்தேகத்தின் பேரில் உள்ளூரைச்சேர்ந்த தனபால அரமனிஸ என்னும் இருவரும் கைதுசெய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டிருக்கின்றனர். ரக்வான் போலிஸார் மேற்கொண்டு புலன் விசாரித்து வருகின்றனர். (ந-நி)

பெண்ணும் மாப்பிள்ளையும் விவாகஞ் செய்துகொள்ள வேண்டும்

சாவகச்சேரி, நவ. 29

சாவகச்சேரி மாரிமுத்து இராசரட்னம் என்பவர் அப்பாக்குட்டியின் மகள் நல்லம்மாவை களவாகத் தூக்கிச் சென்றார் என்று சாவகச்சேரி போலிஸ் பகுதியாரால் தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணைக்கெடுக்கப்பட்டு இருபகுதியாரும் (வழக்காளியும் எதிரியும்) சமாதானப்பட்டு கொண்டதன்பேரில் நீதிபதி இருவரையும் தகுந்த முறையில் விவாகஞ் செய்து கோர்ட்டில் அத்தாட்சிப்படுத்த வேண்டுமென்று எதிரியைப் பிணையில் விட்டு இருவரையும் 20ந் தேதி தம்பதிகளாகக் கோர்ட்டில் வரும்படி நீதிபதி தீர்ப்பளித்திருக்கிறார்.

பிரான்ஸில் அடக்குமுறைச் சட்டம்

கமியூனிஸ்ட் பத்திரிகைகள் பறிமுதல்

"ஈவிரக்கமில்லாத நடவடிக்கை எடுப்போம்" என்கிறார் ஷுமன்

பாரிஸ், நவ. 29

பிரெஞ்சு அரசாங்கம் என்றும் அமுல் நடத்தப்பட்டிராத மிகக் கடுமையான வாய்ப்பூட்டுச் சட்டத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கிறது.

இதற்குக் காரணம் பிரான்சில் கமியூனிஸ்டுகள் தலைமையில் நடந்து வரும் 20 லட்சத்திற்கதிகமான தொழிலாளரின் மாபெரும் வேலைநிறுத்தப் போராட்டமே. இன்று பாரிசில் 4 கமியூனிஸ்ட் கூட்டங்கள் நடக்கும் என்ற செய்தியினால் போலீஸ் இலாகாவும் துருப்புகளும் மிக ஜரூராகக் காவல் காத்து நின்றன.

வேலை நிறுத்த எதிர்ப்பு மசோதா இன்று தேசிய சபையில் விவாதிக்கப்பட்டு வருகிறது. இதற்கிடையில் கமியூனிஸ்ட் தினசரிப் பத்திரிகை ஹியூமனிட்டும், கே. கோயரும் வெளியிட்ட விசேஷப் பதிப்புகள் இன்று பறிமுதல் செய்யப்பட்டன. இவற்றில் இரண்டாவதாகக் குறித்த பத்திரிகை இரண்டு அங்குல கன எழுத்துகளால் "குடியரசுக்குப் பேராபத்து" என்ற தலைப்பைக் கொடுத்திருந்தது. ஹியூமனிட் பத்திரிகையோ பின் வருமாறு எழுதுகிறது:-

'ஜனநாயக ஸ்தாபனங்களையும், பத்திரிகைகளையும் சூழ்ந்து பொது மக்கள் திரளவேண்டிய நேரம் வந்துவிட்டது. எமது தீவிரத் தொண்டர்களை நாம் கவனமாகப் பேணுவதோடு' பொய் கூறாத நம் பத்திரிகைகளின் விநியோகத்தையும் சரிவர ஏற்பாடு செய்ய வேண்டும் இங்குள்ள அமெரிக்கக் கட்சி நமது அரசியல் திட்டத்தைக் கிழித்தெறிவதற்குத் தயாராகிறது. இன்றிரவு நடுச்சாமத்தில் அவர்களுடைய சதிகாரப் பாய்ச்சல் நடக்கும். தொழிலாளர்களே. ஜனநாயகவாதிகளே, தேச பக்தர்களே, பாதகச் செயலைத் தடுக்க உங்களால் முடியும் உங்கள் பத்திரிகை ஹியூமனிட்டைப் பேணுங்கள்!"

இரவு போலிசார் கமியூனிஸ்ட் பத்திரிகைகளைப் பறிமுதல் செய்யும்போது கமியூனிஸ்ட் பத்திரிகாலயக் கட்டிடங்கள் திறந்து கிடந்தன.

வேலை நிறுத்த எதிர்ப்புத் தீர்மானத்தை ஆதரித்து நிறைவேற்றும்படி பிரதமர் ஷுமன் இன்று தேசிய சபைப் பிரதிநிதிகளை வேண்டிக்கொண்டார். சபையில் முதலாவது பெரிய கட்சியாக விளக்கும் கமியூனிஸ்டுகள் "நெப்போலியன்கூடச் சிந்திக்காத மிக மோசச் சட்டம் இது" என்று குறிப்பிட்டார்கள். பிரதமர் "கமியூனிஸ்டுகளே இச்சட்டம் தோன்றுவதற்குக் காரணம்" எனத் தெரிவித்தார்.

ஷுமனால் கொண்டுவரப்படும் புதிய வேலை நிறுத்த எதிர்ப்புச் சட்டம் 80 ஆயிரம் தேசியக் காவலாளர்களைத் திரட்டுவதற்கு அனுமதி தருவதோடு 5 லட்சம் பிராங்க் அபராதம் விதிப்பதற்கும் ஐந்து வருட சிறைத் தண்டனைவரை விதிப்பதற்கும் அதிகாரம் தருகிறது. இத்தண்டனைகள் வேலை நிறுத்தத்திற்கு உதவியளிக்கும் பிரசங்கங்கள், கூச்சல்கள், கட்டுரை எழுதல், சுவரொட்டிகள் எழுதல் துண்டுப் பிரசுரம் எழுதல் எழுதுவதற்குத் திட்டமிடல் ஆகிய குற்றங்களுக்கு அளிக்கப்படும். நாச வேலைகளுக்கு இத் தண்டனைகளின் இரட்டிப்பு வழங்கப்படும்.

இச் சட்ட விவாதத்தின் போது தேசிய சபையில கோபமும் துவேஷமும் தாண்டவமாடின. கமியூனிஸ்ட் பிரதிநிதி ஒருவர் ஷுமனைப் பார்த்து "உமக்கு ரத்தம் குடிக்கத் தாகம் எடுக்கிறது" எனக் கூவினார். "உமமுடைய கோஷ்டிக்கெதிராகவே நாம் ஆயுதம் தரிக்கிறோம். எமதுநாட்டில் சட்ட விரோதப் பிரசாரம் செய்யும் தொல்லைக்காரர்கள் கமியூனிஸ்டுகளால் கொண்டுவரப்பட்டிருக்கும் அன்னியர்களே. அவர்களை நசுக்க நாம் ஈவிரக்கமின்றி நடவடிக்கை எடுப்போம்" என்று ஷுமன் சப்தமிட்டார்.

பாரிஸில் ரயில்வேப் பாதையில் நாசவேலைகள் செய்யப்பட்டிருந்ததோடு, பல இடங்களில் தந்திக் கம்பிகளும் அறுக்கப்பட்டிருந்தன

கண்ணீர்ப் புகை

மத்திய பிரான்ஸில் உள்ள ஓர் நகரில் நகர மண்டபத்தில் வேலைநிறுத்தக்காரர் புகுவதற்கு முயன்றபோது போலிசார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர். அத்துடன் டாங்கிப் படைகளும் வந்து கூட்டத்தைக் கலைத்தனர்.

போலிஸ் தலைமைக் காரியாலயத்துள் தொழிலாளர் பிரவேசிக்க முயன்றனர் கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசப்பட்டன. ஆனால் கூட்டம் போலிசாரைச் சூழ்ந்து அவர்களை நிராயுதபாணிகளாக்கிவிட்டனர், டாங்கிப் படைகள் வந்தபோது அவற்றைக் கைப்பற்றிவிட அவர்கள் முயன்றார்கள். ஆனால் டாங்கிகள் அதற்கு இடமளிக்கவில்லை.

வேலை நிறுத்த எதிர்ப்பு மசோதா நாளை நள்ளிரவு அமுலுக்கு வரும் என்றும் அடுத்த மாதம் மே 31ந் தேதிவரை நீடிக்கும் எனத் தெரிகிறது.

சபர்மதி ஆசிரமத்துக்கு பம்பாய் கவர்னர் விஜயம்

காந்திஜியின் பழைய படங்களைக் கண்டு பூரிப்பு

அகமதாபாத், நவ. 28

சபர்மதியிலிருக்கும் காந்திஜியின் ஹரிஜன ஆசிரமத்துக்கு இன்று காலை ஸர். ஜான்கால்வில் விஜயம் செய்தார். 1917லிருந்து 1933 வரை காந்திஜி இங்கு தங்கியிருந்தார். ஆசிரமத்தை சுற்றி பார்வையிட்டு தொழிற்சாலைக்கும் பள்ளிக்கூடத்துக்கும் விஜயம் செய்தார் மகாத்மா காந்தியின் பழைய புகைப் படங்களை அவர் கண்டு சந்தோஷமடைந்த கவர்னர், அவைகளை பத்திரப்படுத்தி வைக்க வேண்டுமென்றும், எதிர்கால சரித்திராசிரியர்களுக்கு அது உபயோகமாக இருக்குமென்றும் கூறினார்

புதுக்கோட்டை காங்கிரஸ் தலைவர்கள்

சென்னை, நவ. 29

புதுக்கோட்டையில்பொறுப்பாட்சி ஏற்படுத்துவது சம்பந்தமாக சர்தார் வல்லபாய் பட்டேலுடன் கலந்தாலோசனை செய்ய புதுக்கோட்டை சமஸ்தான காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ. வி. கிருஷ்ணமூர்த்தி, பொதுக் காரியதரிசி ஸ்ரீ. ராமபழனியப்பன் இருவரும் நாளை காலை விமானமூலம் டில்லி புறப்படுகின்றனர். திருமயம் தாலூகா காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஸ்ரீ இராம ஸ்ரீனிவாசன் டிசம்பர் முதல் தேதியன்று விமான மூலம் டில்லி சென்று அங்கு தாதுகோஷ்டியுடன் கலந்து கொள்வார். ஸ்ரீ. வல்லத்தரசும் டில்லியில் இவர்களுடன் கலந்து கொள்வார்.

அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்!

இலங்கை இந்தியர்கள் கமியூனிஸ்டுகளுடன் சேர்ந்து கொண்டிருக்கிறார்களாம்

திரு. மோத்தா மீது திரு. சேனநாயக்கா சுமத்தும் பழி

பண்டித நேருவுடன் சம்பாஷிக்கச் செல்லும் சமயம் ஒரு 'பாணம்' விட்டுப் பார்க்கிறார்

சென்னை, நவ. 30

இலங்கை பிரதம மந்திரி திரு. டி. எஸ. சேனநாயக்கா, இந்தியா பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேருவைச் சந்தித்துப் பேசப் போவதைக் குறித்து கொழும்பிலுள்ள அஸோஸியேட்டட் பிரஸ் நிருபர் அவரைப் பேட்டிகண்டு பேசியபோது திரு. சேனநாயக்கா பின்வருமாறு தெரிவித்தார்:- இந்தியா பிரதம மந்திரியை நான் சந்தித்துப் பேசுவதன் பயனாக திருப்திகரமான ஏற்பாடுகள் உண்டாகுமென்று நான் நம்பிக்கையுடையவனாக இருக்கிறேன். இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே இரு நாடுகளுக்கும் நலன் பயக்கக்கூடிய பொதுவான விஷயங்களைப் பற்றிப் பேசுவோம். இலங்கை வாழ் இந்தியர்களின் அந்தஸ்து, ராணுவப் பாதுகாப்பு, வர்த்தகம், ஏற்றுமதி இறக்குமதி வரிகள் முதலிய பிரச்னைகள்பற்றி செய்யவேண்டிய முடிவுகள் பற்றி ஆராய்வோம். தீர்க்கப்படவேண்டிய இப்பிரச்னைகளைப்பற்றி நாங்கள் நேருக்குநேர் ஒருவருக்கொருவர் மனம்விட்டு கலந்து பேசுவோம். எங்கள் சம்பாஷணைகளின் பயனாக பண்டித நேருவும நானும் 'ஒருவித ஒப்பந்தத்திற்கு வருவோமேயானால்', அந்த ஒப்பந்தத்தை அமுல் செய்யும் பொருட்டு உடனடியாக இந்தியாவிலும் இலங்கையிலும் சட்ட சபைகள் மூலம் சட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றுவோம்.

1939ம் வருஷம் பண்டித நேரு இலங்கைக்கு விஜயம் செய்திருந்தபோது, ஒரு இரவு முழுவதும் நாங்கள் இலங்கை-இந்தியா பிரச்னைகளைக் குறித்து சம்பாஷித்தோம். அப்பொழுது அவர் இருவர் கருத்துக்களும் அதிக வேறுபாடுடையனவாக இல்லையென்று தெரிவித்தார்.

கவர்னர் பிரசங்கத்தின்மீது பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றபோது திரு ஜி ஆர். மோத்தா பேசிய பேச்சு வருந்தத்தக்கது நான் பண்டித நேருவுடன் பேசி முடிக்கவேண்டுமென்று எண்ணியிருக்கும் விஷயத்திற்கு திரு மோத்தாவின் பேச்சு பங்கம் விளைவிக்கக்கூடியதாக இருக்கிறது. நான் பண்டித நேருவுடன் பேசி செய்யும் முடிவு இலங்கையிலுள்ள இந்தியர்களால் ஏற்றுக்கொள்ளப் படாததாகி விடும் என்ற அர்த்தத்தைக் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது திரு மோத்தாவின் பேச்சு. பண்டித நேருவுடன் சம்பாஷணை நடத்த இருக்கும் இச்சமயத்தில் இலங்கையிலுள்ள இந்தியர்கள் கமியூனிஸ்டுகளுடன் சேர்ந்துகொண்டிருப்பது எனக்கு பெரும் ஏமாற்றத்தைக் கொடுக்கிறது.

திரு சேனநாயக்கா பண்டித நேருவை டிசம்பர் 28-ம் தேதி சந்தித்துப் பேசுவார். டிசம்பர் 26-ம தேதியன்று திரு சேனநாயக்கா கொழும்பிலிருந்து டில்லிக்கு விமானத்தில் புறப்படுவார். அவருடன் அவரது நிரந்தரக் காரியதரிசி திரு ஸி டப்ளியூ. அத்துகோரளையும் செல்வார்.

இலங்கையிலுள்ள இந்திய சர்க்கார் பிரதிநிதி திரு வி. வி கிரி டிசம்பர் 18-ம் தேதியே சென்னைக்குப் பிரயாணமாவார். அவர் சென்னையில் சில தினங்கள் தங்கிவிட்டு இலங்கை இந்தியா சமபாஷணை நடைபெறும் சமயம் டிசம்பர் 28-ம தேதி டில்லியிலிருப்பார்.

பாலஸ்தீனத்தைப் பிரிக்க ஐக்கிய தேச சபை முடிவு

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

முதல் தேதிக்குள் பாலஸதீனத்திலிருந்து பிரிட்டன் வெளியேறுவதற்கு இத்தீர்மானம் உதவியாக இருக்குமென்று இங்குள்ள பிரிட்டிஷ் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அராபியர் முஸ்தீபு

பாக்தாத், நவ 30

இங்கு நேற்று அராபிய நாடுகளின் ராணுவ நிபுணர்கள் மகாநாடு கூடியது. அவர்கள் பாலஸதீனம் சம்பந்தமாக தீர்மானங்கள் செய்தனர். பக்கத்து நாடுகளிலிருந்து அராபியர்கள் ஏராளமாகச் சென்று பாலஸதீனத்தில் குடியேறவேண்டுமென்றும் தீர்மானித்தனர்.

எகிப்தில் நடவடிக்கை

கெய்ரோ, நவ. 30

பாலஸதீன பிரிவினைச் செய்தி எட்டியதும் எகிப்து சர்க்கார் நாடெங்கும் போலிஸ் படைகளைப் பந்தோபஸ்துக்காக நிறுவினர். யூதர்களுக்கு விரோதமாக கலவரம் ஏற்படாதபடி எகிப்துசர்க்கார் இவ்வித நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் யூதர்களைப் பாதுகாக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

அராபிய லீக் காரியதரிசி கர்ஜனை

கெய்ரோ, நவ. 29

பிரிவினைத்திட்டத் தீர்மானம் நிறைவேறும் சமயம் அராபிய லீக் காரியதரிசி அசாம் பாஷா இங்கு பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:-

நான் அராபிய நாடுகளில் 6 வாரகாலமாகச் சுற்றுப்பிரயாணம் செய்து சவூதி அரேபியாவில் மன்னர் இபுனு சவூதைச் சந்தித்துப் பேசிவிட்டு வருகிறேன். பாலஸதீனத்தைப் பிரிக்கவே ஐக்கிய தேச ஸ்தாபனம் தீர்மானிக்குமென்று தெரிகிறது. அவ்விதம் செய்தால் பாலஸதீனத்தை அராபியரின் சுதந்திர நாடாக்கச்செய்து வந்த போராட்டத்தின் முதல் கட்டம் முடிவுற்றது என்று நாம் கருதவேண்டும்.

இப்போது போராட்டத்தின் இரண்டாவது கட்டத்தை ஆரம்பிக்க வேண்டியதுதான்! எத்தனைவருடங்களானாலும் 1950 அல்லது 1960-வது வருடம் வரையுமாவது அராபியர்கள் போராடி இறுதியில் வெற்றிபெறுவார்கள் என்பதை நீங்கள் உலகுக்கு தைரியமாகச் சொல்லலாம். காலம், நியாயம், ஆட்களின் எண்ணிக்கை எல்லாம் நமக்கு அனுகூலமே ஆயுதங்கள் மட்டும் இன்னும் தேவை. அவைகளும் நமக்குக் கிடைக்கும். யுத்தம்புரிய சவூதி அரேபியா, பாரசீகம், ஈராக் முதலிய நாடுகள் எப்பொழுது சமயம் வரும என்று காத்துக் கொண்டிருக்கின்றன.

இனி ஐக்கிய தேச ஸ்தாபனம தனது தீர்மானத்தை அமுல் செய்வதைப் பொறுத்திருக்கிறது எங்கள் நடவடிக்கை பிரிட்டன் வெளியேறிய பிறகு யூதர்கள் அத்தீர்மானத்தை நடைமுறையில் அனுஷ்டிக்க ஆரம்பிப்பார்களேயானால், அப்பொழுது பாலஸதீன அராபியர்கள் நமது உதவியை நாடுவார்களேயானால் நாம் உதவி செய்யத் தயங்க மாட்டோம். இது சம்பந்தமாக ஏற்கனவே முடிவுகள் செய்யப்பட்டுவிட்டன. மொராக்கோவிலிருந்து ஆப்கானிஸ்தானம் வரையுள்ள அராபியர்கள் பாலஸதீனத்திலுள்ள தங்கள் இனத்தவருக்கு உதவி செய்யப்பின்வாங்கமாட்டார்கள் பிரிவினைக்கு ஆதரவளித்த நாடுகளைப் பகிஷ்கரிப்பதோ அல்லது ஐக்கிய தேச ஸ்தாபனத்திலிருந்து விலகுவதோ இப்பொழுது அராபிய நாடுகளின் பிரச்னைகள் அல்ல (ராய்ட்டர்)

நடக்கும் மீன்!

மெல்போர்ன், நவ. 29

விஞ்ஞான வியாபார கைத்தொழில் ஆராய்ச்சி கௌன்ஸிலின் மெம்பர்கள் மேற்கஸ்திரேலியா சமுத்திரக்கரையில்கண்ணிவைத்து பிடித்த 5 அங்குல நீளமுள்ள மீன் ஒன்று இரு கால்களால்நேரடியில்நடக்கிறது! இருபுறமும் உள்ள இறகுகளை அது நடக்கும்போது ஊன்றுகோல்களாக உபயோகப்படுத்துகிறது. மற்றபடி அது தோற்றத்தில் மீனை ஒத்திருக்கிறது.

கிங்ஸ்லியில்
தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும்
சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்
பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர் நடனங்கள், செவிக்கினிய கீதங்கள், கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங் கவரும் உயரிய நடிப்புகள் நிறைந்த
கன்னிகா



தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களிக்கும் படம்
என். எஸ் கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வரதன், எம். எஸ. சரோஜினி, எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என். ரத்தினம் ஆகியோர் திறம்பட நடித்தது!

கிரவுன் தியேட்டர்
ஸ்கின்னர்ஸ் ரோடு, மருதானை.
தினசரி பிற்பகல் 2-30, மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும்,
சித்ரகலாவின் உன்னத தயாரிப்பு
முதல் நம்பர் நடிகர்கள் எடிஜெயமான, ருக்மணி தேவி மற்றும் பலர் நடிக்கும்
"இழந்த உறுதி"
என்னும் வர்ணம் தீட்டப்பட்ட முதல் சிங்களப் படம்
புதிய இயந்திர அமைப்புகளுடன் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

கமியூனிஸ்டுகள் முன்னேற்றம்

மத்திய சீனத்தைப் பாதுகாக்க ஆலோசனை

சீனக் குடியரசுத் தலைவர் ராணுவத்தலைவரானார்

நாங்கிங, நவ. 29

வடசீனத்தில்ஹெப்பிக், டென்ஸ்டின், பாவோடிங ஆகிய மூன்று நகரங்களின் முக்கோண எல்லைக்குள் நடைபெறும் பெரும் போராட்டத்திற்கு தலைமைவகிக்கும் பதவியை சீனக் குடியரசுத்தலைவர் சியாங்கை ஷேக் ஏற்றுக்கொண்டார். அவர் சீனத் தலைவர்கள் அனைவரையும் சந்தித்து ஆலோசனை செய்து இவ்வித நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்.

கமியூனிஸ்டு துருப்புகள் ஹோப்பை மாகாணத்திலுள்ள யூவான்ஷின் நகரைக் கைப்பற்றின. ஷான்டுங் மாகாணத்தில் வடகிழக்குப் பகுதியில் சீன சர்க்கார் துருப்புகள் பின் வாங்குகின்றன. கமியூனிஸ்டு துருப்புகள் அங்கு ரயில் பாதை வழியாக முன்னேறுகின்றன ஸிங்டாவோ நகருக்கு வெளிப்புறங்களிலும் காவோமி நகருக்குள் வீதிகளிலும் போராட்டங்கள் நிகழ்கின்றன. ஷான்டுவாய் மாகாணத்தில் ஜெனரல் சென்யி தலைமையில் கமியூனிஸ்டு துருப்புகள் லுங்கெள, செபூ, வெய்ஹெய் வெய், துறைமுகங்களை நோக்கி முன்னேறுகின்றன.

மத்திய சீனத்தில் ஹாங்கெள நகரில் சீன சர்க்கார் பாதுகாப்பு மந்திரியும், மத்திய சீன தளபதியுமான ஜெனரல் பாய் சுங்ஸி மத்திய சீனத்தைப்பாதுகாப்பது பற்றி மத்திய சீன மாகாண கவர்னர்களுடனும் ராணுவத் தளபதிகளுடனும் கலந்து ஆலோசனை செய்து வருகிறார்.

ஹோனன் மாகாணத்தில் லோயாங நகரை கமியூனிஸ்டுகள் கைப்பற்றும் அபாயம் நேரிட்டிருப்பதாக சீன சர்க்கார் செய்தி அறிவிக்கிறது லோயாங்கிற்கு 20 மைல் தூரத்திலுள்ள இச்சுவான் நகரை கமியூனிஸ்டுகள் தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். (ராய்ட்டர்)

கல்வியே கருந்தனம்

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட்டிற்காக 1947-ம் ஆண்டு டிசம்பர் மீ 2உ இந்த பத்திரிகை 194A. கட்டாரத் தெரு, கொழும்பு, சுதந்திரன் அச்சுக் கந்தோரில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுகிறது.

கட்டிடத்துக்கு
தேவையான சிமந்தும்
மற்றச் சாமான்கள் எல்லாம்
எங்களிடம் குறைந்தவிலையில்
பெற்றுக்கொள்ளலாம்.
என். வயித்திலிங்கம் - கொம்பனி
No-38. மூன்றுங்குறுக்குத் தெரு,
புறக்கோட்டை, கொழும்பு.
டெலிபோன்: 2029
டெலிகிராம்; 'ENVAITLIN'
கிளை:- பெரியகடைத் தெரு,
யாழ்ப்பாணம் டெலிபோன்: 30.

பல்கேரியா-யூகோ ஒப்பந்தம்

முடிவாகிவிட்டதாக டிட்டோ கூற்று

பெல்கிரேட், நவ. 29

பல்கேரியாவுடன் யூகோஸ்லாவியா ஒரு நட்பு ஒப்பந்தம் செய்துள்ளது. அதற்குக் கை ஒப்பமிட்டு பெல்கிரேட் மீண்ட யூகோஸ்லாவியாவின் கமியூனிஸ்ட் பிரதம மந்திரி மார்ஷல டிட்டோவை 35 ஆயிரம் ஜனங்கள் ஸ்டேஷனில் எதிர் கொண்டு வரவேற்றார்கள்.

பெரும் ஆரவாரத்துக்கு இடையே மார்ஷல் டிட்டோ பின் வருமாறு குறிப்பிட்டார்

'யூகோஸலாவியாவுக்கும் பல்கேரியாவுக்கும் எவ்வித மான இரகஸிய ஒப்பந்தமும் கிடையாது. நாம் செய்த ஒப்பந்தங்கள் வெளியானவை நண்பர்களும் எதிரிகளும் கூட அவற்றை அறிவர். பல்கேரியா-யூகோஸலாவிய சகோதரத்வம் பால்கன் நாடுகளின் சமாதானத்தை உறுதிப்படுத்தும் இங்கு யாராவது சமாதானத்திற்கெதிரான நடவடிக்கை எடுத்தால் அவருக்குச் சுடச்சுட பதில் கொடுக்க நாம் எப்போதும் தயார், எமது நாட்டையும் ஸ்தாபனங்களையும் நாம் ஒன்றாகப் பாதுகாத்துப் பேணுவோம்.'

யூகோஸ்லாவிய பாராளுமன்றத்தில் டிட்டோ பேசியதாவது:-'பல்கேரியா-யூகோஸலாவியா என்ற இரு நாடுகளும் ஒரு சமஷ்டிக் கொள்கையை அமுல் நடத்த ஆரம்பித்து விட்டன. சட்ட ரீதியாக நாம் ஓர் சமஷ்டி அரசாங்கம் ஆகிவிடாதபோதும் வாஸ்தவத்தில் நாம் அதனை அடைந்து விட்டோம். வெறும் காகிதச் சமஷ்டியால் பிரயோஜனம் கிடையாது,

மார்ஷல் டிட்டோவும் பல்கேரியப் பிரதமர் மிட்ரோவும் செய்துள்ள ஒப்பந்தங்கள் பிரகாரம் இரு நாடுகளுக்கும் இடையில் உள்ள எல்லைச் சட்டங்கள் பல நீக்கப்பட்டுள்ளன, (ராய்ட்டர்)

இந்தியாவின் இறக்குமதி கொள்கை

ஸ்டெர்லிங் நிதி பங்கீடு

இந்தியா-பாகிஸதான் ஏற்பாடு

புதுடில்லி, நவ. 29

இன்று இந்தியா பாராளுமன்றத்தில் நிதி மந்திரி திரு. ஆர். கே. ஷண்முகம் செட்டி பின்வருமாறு தெரிவித்தார்:-

லண்டனிலுள்ள இந்தியாவின் ஸ்டெர்லிங் நிதி விடுவிக்கப்பட்டதும் ரிசர்வ் பாங்க் பணமாகிவிடுகிறது. இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் இறக்குமதி செய்யப்படும் சரக்குகளுக்கு இது உபயோகப்படுத்தப்படும்.

பிரிவினைக்கு முன்னிருந்தபடி ஒரே மாதிரியான இறக்குமதிக் கொள்கையை அனுஷ்டிக்க இந்தியாவும் பாகிஸதானும் ஏற்பாடு செய்துகொண்டிருக்கின்றன. இந்த ஏற்பாட்டின்படி இரு நாடுகளும் தனித்தனியே இறக்குமதி லைசென்சுகளை வழங்கும். அந்நிய நாணயப் பரிவர்த்தனைக்காக இறக்குமதிப் பொருட்கள் இரு நாடுகளுக்கிடையே பங்கிடப்படும். இது மூன்று விதமாக நடைபெறும்.

(1) பரிவர்த்தனைக் கட்டுப்பாடில்லாத இறக்குமதிசாமான்கள் சம்பந்தமாக இரு நாடுகளும் தாராளமாக லைசென்சுகளை வழங்கும்

(2) பரிவர்த்தனைக் கட்டுப்பாடுள்ள இறக்குமதிச்சாமான்கள் சம்பந்தமாக ஸ்டெர்லிங் நிதி இரு நாடுகளுக்கிடையே பங்கிடப்படும். பிரிவினைக்குப் பின் இவ்வருடம் டிசம்பர் 31-ந் தேதி வரை இந்தியா 26 கோடி ரூபாயும் பாகிஸ்தான் ஆறரைக் கோடி ரூபாயும் ஆக பங்கிட்டுக்கொள்ள வேண்டுமென பிரிவினைக் கவுன்ஸில் தீர்மானித்திருக்கிறது.

(3) பரிவர்த்தனைக்கு அனுமதியில்லாத இறக்குமதிச் சரக்குகளுக்கு இந்தியாவும் பாகிஸ்தானும் அறவே லைசென்சுகள் வழங்காது. (ராய்ட்டர்)